விலை ரூபா: 8.00 Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 19 திங்கட்கிழமை (02.05.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 134




## மக்கள் வெள்ளம் அலைமோத உரிமைக்கோஷம் முழங்கியது!

### குடாநாட்டில் உணர்வெழுச்சியுடன் மேதினம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்தேசியத்தை வலியுறுத்தி நேற்று யாழ். நகரில் மாபெரும் மேதினப் பேரணி நடைபெற்றது.

யாழ். மாவட்டப் பொது அமைப்புக்களும், தொழில்சங்கங்களும் இணைந்து நடாத்திய இம் மேதின பேரணியில் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு தமது உரிமைக்கோஷங்களை வெளிப்படுத்தினர்.

நேற்று மாலை 2.30 மணிக்கு நல்லூர் ஆலய முன்றலில் ஆரம்பமான பேரணியானது யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தை சென்றடைந்தது.

பேரணியில் கலந்துகொண்டோர் பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளையும், தேசியத் தலைவர் வே.பிரபாகரன் மற்றும் மறைந்த ஊடகவியலாளர் மாமனிதர் சிவராம் ஆகியோரின் படங்களைத் தாங்கியவண்ணம் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் இறுதியில் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் மேதின நிகழ்வு நடைபெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)




# தமிழ் மக்கள் அரசியல் - இராணுவ ரீதியாக தம்மைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும்!

## மேதின நிகழ்வில் இளம்பரிதி உரை

(யாழ்ப்பாணம்)

**தமிழ்மக்கள் அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் நம்பிக்கையுடன் தம்மைப் பலப்படுத்திக் கொள்ளவேண்டியது காலத்தின் தேவையும், யதார்த்தமுமாகும். இவ்வாறு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மேதின நிகழ்வில் உரையாற்றும்போது தெரிவித்தார்.**

குடாநாட்டில் மேதின நிகழ்வு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நேற்று இடம் பெற்றது. இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய இளம்பரிதி மேலும் பேசுகையில், சுதந்திரம் மனிதனின் பிறப்புரிமை. சுயநிர்ணய உரிமை இயல்பு வாழ்வியலின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்கட்சிகளின் மேதின நிகழ்வு நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது

(கொழும்பு)

கொழும்பில் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் என்பன இணைந்து மேதின நிகழ்வுகளை ஏற்பாடு செய்தன. அவற்றின் ஊர்வலங்களும், கூட்டங்களும் நடைபெற்றன.

பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐ.தே.கட்சி, ஜே.வி.பி உட்பட பல கட்சிகள் மேற்கொண்ட ஊர்வலங்கள் மற்றும் கூட்டங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சிவராமின் இறுதிச்சடங்கு இன்று

## ஊடகவியலாளர்கள், பிரமுகர்கள் மட்டு. நகர் விரைவு

(கொழும்பு)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் இறுதிச் சடங்குகள் இன்று மட்டக்களப்பில் நடைபெற

காக வைக்கப்பட்டிருந்தது. அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், இராஜதந்திரிகள், கல்விமான்கள் உட்பட ஏராளமானோர் தமது அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

அவரது மட்டக்களப்பு இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஆலயடிச்சோலை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

சிவராமின் இறுதிநிகழ்வில் கலந்து

## மாமனிதர் சிவராமிற்கு கிளிநொச்சியில் இரங்கல்

(கிளிநொச்சி)

கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாமனிதர் டி.சி[illegible] அஞ்சலி செலுத்துமுகமாக இ[illegible] நொச்சியில் இரங்கல் நிகழ்வு [illegible] வுள்ளது.

இந்த இரங்கல் நிகழ்வு கிளி[illegible] பண்பாட்டு மண்டபத்தில் நடை[illegible]

(கொழும்பு)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் இறுதிச் சடங்குகள் இன்று மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

அன்னாரின் புகழுடல் நேற்று முன்தினம் கொழும்பு கல்கிசை இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், இராஜதந்திரிகள், கல்விமான்கள் உட்பட ஏராளமானோர் தமது அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

இதேவேளை நேற்றிரவு அன்னாரின் புகழுடம்பு அங்கிருந்து மட்டக்களப்புக்கு எடுத்துச்செல்லப்பட்டு இன்று மாலைவரை அவரது மட்டக்களப்பு இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஆலயடிச்சோலை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

சிவராமின் இறுதிநிகழ்வில் கலந்து கொள்வதற்காக உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மட்டக்களப்புக்குச் சென்றவண்ணம் உள்ளனர். (இ-8)

... நொச்சியில் இரங்கல் நிகழ்வு ... வுள்ளது.

இந்த இரங்கல் நிகழ்வு ... பண்பாட்டு மண்டபத்தில் ந... ளது. இந்நிகழ்வில், பத்திரிகையா... போராளிகள், மக்களெனப் பலர் ... கொள்ளவுள்ளனர்.

## சிவராமின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்ள

# புலிகள் குழுவினர் நேற்று மட்டு. நகர் சென்றனர்

(கிளிநொச்சி)

ஊடகவியலாளர் மாமனிதர் தர்மரத்தினம் சிவராமின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக விடுதலைப் புலிகளின் தலைமையகத்திலிருந்து 12 பேர் கொண்ட குழுவொன்று நேற்று மாலை மட்டக்களப்புக்குச் சென்றுள்ளது.

விடுதலைப்புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் புலித்தேவன், மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழினி, விளையாட்டுத்துறை பொறுப்பாளர் பாப்பா, நிதர்சனம் பொறுப்பாளர் சேரலாதன், கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் இளங்கோ ஆகியோரும் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இவர்களின் பயணத்திற்கு ஓமந்தை இராணுவ முன்னணி காவல்நிலையப் பிரதேசத்திலிருந்து செங்கலடி - பதுளைவீதி கொடுவாமடு பாலத்தில் இராணுவ முன்னணி காவல்நிலையப் பிரதேசம்வரை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் வழித்துணையுடன் இராணுவத்தினரால் பாதுகாப்பு வழங்கப்பட்டது. (ச)

# கருணா குழு முக்கியஸ்தர் இருவர் கைத்துப்பாக்கியுடன் கைது

(அம்பாறை)

கருணா குழுவைச் சேர்ந்த முக்கிய நபர்களில் ஒருவரான பாரதி எனப்படும் இனியபாரதி உட்பட இருவர் அம்பாறை நகரில் கைத்துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரையும் எதிர்வரும் 14 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பிலிருந்து இவர்கள் பயணம் செய்த வாகனம் அம்பாறை நகரிலுள்ள பொலிஸ் சோதனைச்சாவடியொன்றில் சோதனையிடப்பட்டபோது 9 எம்.எம். ரக கைத்துப்பாக்கியும், அதற்கான மகசீன்களும், 16 குண்டுகளும் ம... வைக்கப்பட்டிருந்தநிலையில் கண்டு... கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்...

பொலிஸ் விசாரணையின்போது இவர்கள் தாம் கருணா குழுவைச் சேர்ந்... களெனத் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட மற்றையநபர் எம்.எம்.பவுசர் என அம்பாறை பொலிசார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை அம்பாறை மாவட்ட நீதிமன்றத்தில் இவர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 14 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்...

(12 ஆம் பக்கம் பார்க்க)


EXPOAIR
*your friend in the skies...*




யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 2349999 / 8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290 / 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...




# நேற்றைய மேதின நிகழ்வுகளிலிருந்து.....


































படங்கள் ஐங்கரன்

# அறிவியலும் தொழில் நுட்பமும் நாட்டின் சொத்தாக மாறிவிட்டது

## -இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்

(பிலாய்)

கிராமப்புற வளர்ச்சிக்கு அறிவியல் கண்டுபிடிப்பு பயன்படவேண்டும் என்று



தொழில்நுட்பப் பல்கலைக்கழகத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு பேசிய பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

சட்டீஷ்கர் மாநிலத்தில் உள்ள பிலாய நகரில் சுவாமி விவேகானந்தா தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் தொடக்கவிழா நேற்றுமுன்தினம் நடந்தது. பிரதமர் மன்மோகன் சிங் அநத விழாவல் பங்கேற்றுப் பேசினார். அவர் தொடர்ந்து பேசுகையில்,

'இந்தியா இன்னும் கிராமங்களில்தான் வாழ்ந்து வருகிறது. அன்றாட தேவைகளுக்காக இன்னும் விவசாயத்தைததான் நாம நமபி வாழ்ந்து வருகிறோம். கிராமப்புற மக்கள் மற்றும் நலிவடைந்த பிரிவினரின் தேவைகளை நிறைவேற்ற அறிவியல் கண்டுபிடிப்புகள் பயன்பட வேண்டும். கிராமங்களின் முன்னேற்றத்தைக் குறிவைத்து தொழில்நுட்ப அறிவியல் இயங்க வேண்டும்.

அறிவியலும் தொழில்நுட்பமும்தான் ஒரு நாட்டின் சொத்தாக மாறிவிட்ட காலம் இது. அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் தற்போது வளர்ந்துவருகிறது. இந்தியா உலகளாவிய பொருளாதாரத்தில் ஒரு வல்லரசாக வளர வேண்டுமானால் அறிவின் எல்லைக்கே சென்று பணியாற்ற வேண்டும். இந்தியாவின் வளர்ச்சிக்காக நாட்டின் அறிவியல் தொழில்நுட்ப கட்டமைப்பை வலுப்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளது.

இந்தியாவின் அறிவுப்பொருளாதாரத்தை உலகம் இப்போது ஏற்றுக்கொள்ளத் தொடங்கிவிட்டது. உலகமயமாக்கலால் ஏற்படும் சவால்களைச் சமாளிக்க நாம் தயாராக இருக்கவேண்டும். அத்துடன் ஆய்வு மற்றும் மேம்பாட்டுத்துறையில் சாவதேச முதலடுகளை நாம் ஈாக்கவேண்டும.

இதற்காக அறிவுக் கமிஷன் ஒன்றை ஆரம்பிக்கவேண்டும். அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தில் சட்டீஷ்கர் மாநிலமும் ஒரு பகுதியாக வேண்டும். இதற்கான முயற்சிகளில் மாநில அரசு ஈடுபடவேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

அந்த விழாவல் சட்டீஷ்கர் மாநில முதல்வர் ராமன் சிங், மாநில கவர்னர் கே.எம்.சேத், தொழில்நுட்ப கல்வி அமைச்சா அஜய் சந்திராகர் உட்பட பலர் பங்கேற்றனர். (க)

# பயங்கரவாதிகளின் பயிற்சிக்களமாக ஈராக்...

(அங்கரா)

ஈராக், பயங்கரவாதிகளின் பயிற்சிகளமாகிறது என்று துருக்கி பிரதமர் எச்சாக்கை விடுத்துள்ளார்.

ஈராக் மற்றும் அதன் அண்டைநாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஈராக் அரசுக்கு அண்டை நாடுகள் தமது ஆதரவை வெளிக்காட்ட இந்தக் கூட்டம் ஒரு சந்தாப்பததை ஏறபடுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (க-5)

# குண்டர் சட்டத்திலிருந்து விடுவிக்கக் கோரும் மனு

## 5ஆம் திகதி தீர்ப்பு

(சென்னை)

இளைய சங்கராச்சாரியார் விஜயேந்திரரின் தம்பி ரகு, சங்கரமட மேலாளர் சுந்தரேச ஐயர் உள்ளிட்டோரை குண்டர் சட்டத்திலிருந்து வெளியேற்ற தமிழக அரசு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

சங்கரராமன் கொலை வழக்குத் தொடர்பாகக் கைது செய்யப்பட்டவர்களில ரகு, சுந்தரேசஐயர் உள்ளிட்ட பலா குண்டர் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதனை எதிர்த்து இவர்கள் சமர்ப்பித்த மனு மீது நீதிபதிகள் கற்பகவிநாயகம், நாகப்பன் ஆகியோரடங்கிய பெஞ்ச் விசாரணை நடத்தியபோது அரச தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் துளசி ரகு, சுந்தரேச ஐயர் உள்ளிட்ட பதினொரு பேரையும் குண்டர் சட்டத்தின் கீழ் அடைத்திருப்பதற்குப் போதிய ஆதாரம் உள்ளதாகத தெரிவித்தார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் இந்த வழக்கில் 5ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படுமெனத் தெரிவித்தனர்.

ரகு சுந்தரேச ஐயர் ஆகியோர் கஞ்சா வைத்திருந்ததாக மேலும் சில வழக்குகளைப் பொலிஸார் போட்டுள்ளனர். இதனால் இவர்கள குண்டர் சட்டத்திலிருந்து வடுவிக்கப்பட்டால் கூட கஞ்சா வழக்குக காரணமாக இவர்கள் விடுதலையாக வாய்ப்பு இல்லை. (து)




# எல்லைப் பாதுகாப்பை பலப்படுத்தக் கோரிக்கை

(லண்டன்)

ஈராக்கைச் சூழவுள்ள நாடுகளைத் தத்தமது நாடுகளின் எல்லைப பாதுகாப்பைப் பலப்படுத்துமாறும் ஈராக்கின் பாதுகாப்பிற்கு அது உத்தரவாதமாகுமெனவும ஈராக்கின் வெளிவிவகார அமைச்சர் கேட்டுள்ளார்.

ஈராக்கைச் சூழவுள்ள 9 நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் துருக்கி தலைநகரில் கூடியபோதே ஈராக் வெளிவிவகார அமைச்சர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இதேவேளை தீவிரவாதிகள் ஈராக்கில் நுழைவதைத் தடுப்பது குறித்து அநத 9 நாடுகளும் நடவடிக்கை எடுக்கவில்லையெனவும் அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. (க-9)

# சவுதி அரேபியாவில் வெள்ளம்

## 30 பேர் வரை உயிரிழப்பு

(லண்டன்)

சவுதி அரேபியாவில் கடந்த இரு நாட்களாகப் பெய்துவரும் தொடர்ச்சியான மழை வெள்ளத்தில் சிக்கி 30 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

அந்நாட்டின் தெற்குப் பகுதியில் உள்ள அசீர் மாநிலத்திலும், தலைநகர் ஜெட்டாவிலும் மிக மோசமான வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் பல வீடுகள் கடும் சேதமடைந்ததுடன், சாலையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த நூற்றுக்கணககான கார்களும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன.

மின்சார சேவையும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வீடுகள் இடிந்து விழுந்தும், மின்னல் தாக்கியும் ஐந்துபேர் கொல்லப்பட்டதாக உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சினைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

# இராட்சத அலைகள் நீடிப்பு

## மக்கள் பெரும் பீதியில்!

(சென்னை)

தமிழகத்தில் சென்னை உள்ளிட்ட பல்வேறு கடலோர நகரங்களில் கடல் கொந்தளிப்பாகவும், இராட்சத அலைகள் வந்த வண்ணம் இருப்பதாலும் பொது மக்களிடையே பெரும் பீதி ஏற்பட்டுள்ளது.

சுனாமி தாக்குதலுக்குப் பிறகு கடலில் ஏற்படும் ஒவ்வொரு மாற்றமும் கடலோரப் பகுதி மக்களைப் பெரும் பீதியில் ஆழ்த்தி வருகிறது.

இந்நிலையில் கடந்த 2 நாட்களாக தமிழகக் கடலோரப் பகுதி மக்கள் அச்சத்தில் காணப்படுகின்றனா். கடல் அதிக கொந்தளிப்பாகவும் இராட்சத அலைகள் வந்த வண்ணம் இருப்பதாலும் இந்த அச்சநிலை ஏற்பட்டுள்ளது.

தூத்துக்குடியில், இனிகோ நகர் என்ற பகுதியில் கடல்நீர் ஊருக்குள் புகுந்ததால் மக்கள் அலறியடித்து ஓடினா். இதேபோல, திருச்செந்தூரிலும் கடல் மட்டம் உயர்ந்து பெரும் அலைகள் அடித்தன.

இதேபோல, சென்னையில் மெரினா கடற்கரையில், கடல் நீா் அதிக கொந்தளிபபுடன் காணப்பட்டது. மேலும் அதிக அளவில் அலைகள் வந்ததால் கடற்கரைக்கு வந்த பொதுமககள் அச்சமடைந்தனா். 2 மற்றா் உயரத்திற்கும் அதிகமாக அலைகள் எழுவதால் பொதுமக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

இதேபோன்ற கடல் கொந்தளிப்பு கல்பாக்கம், நாகப்பட்டனம் உள்ளிட்ட கடலோரப் பகுதிகளிலும் காணப்பட்டது.

பருவநிலையில் மாற்றம் ஏற் படும் போது இதுபோன்று கடல் கொந்தளிபபு ஏற்படுவது சாதாரண விஷயம்தான் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். (ற)

# நிலவறை கண்டுபிடிப்பு

(காஞ்சிபுரம்)

காஞ்சிபுரத்தில் கட்டடம் கட்ட பூமியைத் தோண்டியபோது பாதாள அறையில் அழகிய ஆவுடையார் சிலை கண்டெடுக்கப்பட்டது.

காஞ்சிபுரம் பிள்ளையார் பாளையம் சேர்மன் சாமிநாத முதலியார் தெருவைச் சேர்ந்தவர் வெங்கடேசன். இவர் சமீபத்தில் நிலம ஒன்றை வாங்கினார். அந்த நிலம் காலியாக இருந்தது. 20 வருடங்களுக்கு முன் அந்த இடத்தில் ஓட்டு வீடு ஒன்று இருந்தது. காலப்போக்கில் அந்த வீடு சிதைந்துவிட்டது.

அந்த இடத்தில் வீடு கட்ட வெங்கடேசன் முடிவுசெய்து கடக்கால் எடுக்கும பணியை கடந்த வெள்ளிக்கிழமை காலை தொடங்கினார். கூலித் தொழிலாளர்கள் கடப்பாரை, மண்வெட்டி உதவியுடன் குழி எடுக்கும் பணியில் ஈடுபட்டனர்.

மூன்று அடி ஆழம் குழி எடுத்த போது திடீரென மண் பூமிக்கும் புதைந்தது. இதனைக் கண்டு தொழிலாளர்கள் அதிர்ச்சி அடைந்தனா். உடனடியாகப் பணியை நிறுத்தினர். சரிந்துவிழுந்த மண்ணை அகற்றினா். அபபோது பூமிக்கடியில் அறை ஒன்று இருப்பதைக் கண்டனா். அதேபோல் மற்றொரு குழியைத் தோண்டியபோதும் அறை இருப்பதைக் கண்டனர். ஒரு குழி வழியே சென்று மற்றொரு குழி வழியே வெளியே வந்தனர். நான்கடி ஆழத்தில் அந்த அறை மூன்றடி அகலம் கொண்டதாக இருந்தது. அடுத்தடுத்து பூமிக்கடியில் சிறிய அறைகள இருந்தன. ஒரு அறையில் அழகிய ஆவுடையாா சிலை கண்டெடுக்கப்பட்டது. கருங்கல்லில் சிறி வடிவில் அமைந்திருந்தது.

கட்டடப் பணிக்காக குழிதோண்டியபோது பாதாள அறை கண்டுபிடிக்கப்பட்ட தகவல் காஞ்சிபுரம் முழுவதும பரவியது. பமிக்கடியில் கோயிலைக் கண்டுபிடித்துள்ளனர். சிவலிங்கம் உள்ளது. பிள்ளையார் பாளையத்தில் பூமியைத் தோண்டிய போது தொடர்ந்து சிவலிங்கங்கள் கிடைத்து வருகின்றன. பிள்ளையார் பாளையத்தில் சுரங்கப்பாதை கண்டுபிடித்துள்ளனர் எனப் பல தகவல்கள் கசிந்தன.

சிறிதுநேரத்தில் பொதுமக்கள் ஆயிரககணக்கில் அங்கு திரண்டனர். பூமிககடியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட ஆவுடையார் சிலையைச் சிலர் தண்ணீரால கழுவினா். பின் சில்வர் தாம்பாளத் தட்டு ஒன்றில் வைத்தனா். சிவலிங்கத்தைச் சுற்றி வில்வ இலைகள் வைக்கப்பட்டன. சிலர் பால் அபிஷேகம் செய்தனர்.

சிறிதுநேரத்தில் கண்டெடுக்கபபட்ட ஆவுடையாருக்கு பூஜைகள் தொடங்கியது.

பூமிக்கடியில் கண்டுபிடிக்கப்பட்ட பாதாள அறையைப் பார்க்கவும், ஆவுடையாரைக் காணவும் பொதுமக்கள் முண்டியடித்தனர். இதனால் கடும் நெரிசல் ஏற்பட்டது. நேரம் செல்லச் செல்ல கூட்டம் அதிகரித்தது. பெண்கள் அபிஷேக நீர் வேண்டும் என்றனர். அதனைத் தொடர்ந்து இளைஞர்கள் வீடுகளிலிருந்து தண்ணீரை எடுத்துவந்து அபிஷேக நீர் எனக்கூறி அனைவருடைய தலை மேலும் தெளித்தனா். பொதுமக்கள் பரவசமடைந்தனர். சிலர் விபூதி வேண்டும் என்றனர். உடனடியாக விபூதி வரவழைக்கப்பட்டது. அனைவருக்கும் வழங்கப்பட்டது. மக்கள் பயபக்தியடன் விபூதியை வாங்கி நெற்றியில் பூசிக்கொணடனர்.

பூஜை ஒருபுறம் சிறப்பாக நடந்து கொண்டிருக்க மற்றொரு புறத்தில் பாதாள அறையைக் காணப் பொதுமக்கள் கூட்டம் அலைமோதியது. இளைஞர்கள் முண்டியடித்துக்கொண்டு பூமிக்கடியிலிருந்த அறைக்குள் புகுந்தனர். பூமிக்கடியில் இருந்த அறைக் கட்டடம் சுண்ணாம்பால் கட்டப்பட்டிருந்தது. இது மிகவும் பழமைவாய்ந்த கட்டடம. பழங்காலத்தில் அறை கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் கோயில் இருந்ததாகக் கூறப்படுகிறது. சிலர் கோயில் எதுவும் இல்லை. வீடு இருந்தது. வீட்டின் உரிமையாளர்கள் நிலவறை கட்டியுள்ளனர். தற்போது கண்டு பிடிக்கப்பட்டது நிலவறை எனத் தெரிவித்தனர்.

நிலவறையில் ஆவுடையார் ஏன் வந்தது என்ற கேள்வியும் எழுந்தது. வீட்டின் உரிமையாளர் ஏதேனும் ஸ்படிக லிங்கங்களை சிறிய ஆவுடையாரில் வைத்து பூஜித்திருக்கலாம் எனத் தெரிவித்தனர். அதனை அடுத்து இளைஞர்கள் பூமிக்கடியிலிருந்த அறையில் ஸ்படிகலிங்கம் எதுவும் உள்ளதா எனத் தேடும் பணியில ஈடுபட்டனர். இதற்கிடையில் பிள்ளையார் பாளையத்தில் பொதுமக்கள் கூட்டம் அலைமோதுவதை அறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். சப் - இன்ஸ்பெக்டர் ரவி தலைமையில் பொலிஸார் பாதாள அறை கண்டெடுக்கப்பட்ட இடத்தைச் சூழந்தனர். அங்கிருந்த அனைவரையும வெளியேற்றினர். அப்பகுதியில் உள்ள மண் முழுவதையும அகற்றி பூமிக்கடியில் உள்ள அறை என்ன என்பதை தொல்பொருள் துறையினர் கண்டுபிடிக்கவேண்டும என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந)

# மனைவியின் மண்டையைப் பிளந்து கொன்ற காதகன்

பொ.இராசதுரை

மகேஸ்வரிக்கும் முத்துக்குமாரனுக்கும் திருமணமாகி மூன்று மாதங்களாகிவிட்டன. இப்பொழுது மகேஸ்வரி 2 மாதக் கர்ப்பிணி. இந் நிலையில்,. தனக்குத் திருமணத்தின் போது தரப்பட்ட சீதனம் போதாது என்றும், மாமனாரிடம் கூறித் தனக்கு மோட்டார் சயிக்கிள் ஒன்று வாங்கி வருமாறு மனைவியை மாமனாரிடம் அனுப்பினான் முத்துக்குமாரன்.

மருமகனின் வேண்டுகோளை மாமனார் மறுக்கவில்லை. தை பிறந்ததும் அறுவடையாகிவிடும். அப்பொழுது மருமகனுக்கு மோட்டார் சயிக்கிள் வாங்கித்தருவதாக மகளிடம் கூறினார்.

மகள் வீடு திரும்பும் போது அரிசி மூடையும் ஒரு வண்டி நிறைய விறகுமாக அனுப்பியும் வைத்தார்.

## வீட்டுடன் சேர்த்து மனைவியைக் கொழுத்தினான்

வீடு திரும்பிய மகேஸ் கணவனுக்காக சோறு சமைக்க ஆரம்பித்தாள். அந்த நேரம் குடிபோதையுடன் வீடு திரும்பிய முத்துக்குமாரன் அவள் பின்பக்கமாகச் சென்று அலவாங்கால் அவளது உச்சந்தலையில் தாக்கியிருக்கிறான். மண்டை சிதற அவள் அந்த இடத்திலேயே பிணமாகச் சாய்கிறாள். மாமனார் அனுப்பிய விறகைச் சிதையாக்கி அரிசி மூடையை அவள் மேல் போட்டு மகேஸுக்கும் அவள் வயிற்றில் வளர்ந்து வரும் 2 மாதச் சிசுவுக்கும் தீயிட்டான் முத்துக்குமாரன் அதுவும் வீட்டினுள் வைத்து. வீட்டையும் சேர்த்தே கொழுத்தினான்.

இந்தப் பயங்கரம் நடந்தது வேலுநாச்சியார் என்ற பெண் அரியனை ஏறிய அந்த ஊரிலேயே என்பது தான் அதிலும் பயங்கரம்.

## காளையார் கோவில் வரலாற்றுச் சின்னம்

காளையார் கோவில் - சிவகங்கையிலிருந்து 15 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கிறது. மருது சகோதரர்களும், வேலு நாச்சியாரும் ஆண்ட வீரமண். இப்பொழுது அதெல்லாம் பழங்கதையாய் போய்விட்டது. இப்பொழுது எல்லாத் திருநகரங்களையும் போலவே அக்கம்பக்கத்தில் வேலை பார்த்துக் கொண்டு அடித்துப்பிடித்து வீடு திரும்பும் சாதாரண வாழ்க்கை வாழும் மக்களையே அங்கு காணக் கூடியதாக இருக்கிறது.

பிரமாண்ட அரண்மனை, தெருவை விழுங்கும் வீடுகள், பழம் பெருமை, சரித்திர சாதனைகள் என அசாதாரணமான பின்னனி ஆனால் சாதாரணமான வாழ்க்கை.

சிவகங்கையிலிருந்து காளையார் கோவிலுக்குப் போகும் வழியெல்லாம் இந்த அடையாளங்கள் வரவேற்கும். இதே காளையார் கோவிலில் மாமன்னன் மருது பாண்டியன் பெயர் கொண்ட கலை அரங்கில் அன்று பிர மாண்டமான சினிமாவொன்று நடந்து கொண்டிருந்தது. மக்கள் எல்லாம் உற்சாகத்துடன் படக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இவர்களைப் போலத்தான் முத்துக்குமாரனும் இரவுக் கடையில் பகோடா சாப்பிட்டுவிட்டு றைக்கோட்டான்சைப் பார்த்துக் கொண்டு, எஸ்.ரீ.டி.பு,த் ஒன்றில் வேலை பார்த்த மகேஸை காதலித்து திருமணம் செய்து கொண்டு கூட்டத்தில் ஒருவனாக வாழ்ந்திருக்க வேண்டும். ஆனால் அவனை விதி இழுத்து சென்ற பாதை வேறுவிதமாக இருந்தது.

## கீதாரி என்றால்...

முத்துக் குமாரனின் கதையை ஆராயுமுன் அவனது தொழிலைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும். அவனொரு கீதாரி. கீதாரி என்றால் ஆடு மேய்ப்பவன். சாதாரண ஆடு வளர்ப்பவனுக்கும் கீதாரிக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. கீதாரியின் வாழ்க்கை நாடோடித் தனமான வாழ்க்கை.

ராஜு நாராயணனின் 'சிறை' என்ற நாவலில் வரும் கீதாரிகளைப் போலத் தான் இவனது வாழ்க்கையும் சுற்றிச் சூழன்று வரண்ட பிரதேசங்களோடு செல்கிறது. ஊர் வரண்ட பு,மியில் அமைந்திருப்பதால் வருடத்தில் ஒன்பது மாதங்கள் தங்கள் ஆடுகளுக்கான மேச்சல் நிலத்தைத் தேடி அலைந்து கொண்டிருப்பார்கள். பகலில் மேய்ந்த ஆடுகளை இரவில் ஒன்று திரட்டி பட்டியாக அடைப்பார்கள். அப்படி அடைக்கப்பட்ட ஆடுகள் போடும் புழுக்கையும் விடும் சிறு நீரும் நிலத்துக்கு நல்ல பசளை என்பதால், விவசாயிகள் இவர்களைத் தேடிவந்து தத்தமது நிலல்களில் பட்டி போடும்படி கேட்பார்கள். இதன் மூலம் அவர்களுக்கு நிறைய வருமானம் கிடைக்கும்.

இந்த விதமாக ஊரூராகப் போய் ஆடுகளை வளர்த்துப் பட்டியைப் பெருக்குவார்கள். இப்படி ஆடுகள் பெருகப் பெருக, கிடாய் எனப்படும் ஆண் ஆடுகளை விற்றுவிட்டு, பட்டி பெருகும் என்பதற்காக மறியாடுகளைத் தொடர்ந்து வளர்த்து வருவார்கள்.

## நாடோடி வாழ்க்கை வாழும் கீதாரிகள்

கீதாரிகள் இந்த விதமாக ஊரூராக அலைந்து திரியும் போது அவர்களது மனைவி மார்களும் உடன் சென்று, ஆண்கள் ஆடு மேய்க்கப்போக, வெளியே போக முடியாத நிலையிலுள்ள சிறிய குட்டிகளை பார்த்துக் கொண்டும் சமையல் வேலைகளைச் கவனித்துக் கொண்டும் இருப்பார்கள். அடிக்கடி இடம் மாறுவதால் போகும் இடங்களுக்கெல்லாம் வீடுகளைத் தூக்கிச் செல்ல முடியாததால் பெரிய கூடை போன்ற பஞ்சாயம் தான் இவர்கள் வீடு. இப்படி வாழ்ந்து கொண்டிருந்த கீதாரிகள் தான் இப்பொழுது விஞ்ஞான வளர்ச்சியால் மெல்ல மெல்ல மாறத் தொடங்கிவிட்டார்கள். அப்படி மாறிவந்த நவீன கீதாரிகளில் ஒருவன் தான் முத்துக்குமாரன்.

முத்துக்குமாரனின் சொந்த ஊர் கூழக்கரை. இது சிவகங்கை மாவட்ட எல்லையில் உள்ளது. அங்கிருந்து ஆடு மேய்க்க காளையார் கோவில் பக்கம் வந்த போது தான் மகேஸை சந்தித்திருக்கிறான் முத்துக்குமாரன். மகேஸின் சொந்த ஊர் தென்னியன்மலை. இதற்கும் கூழக்கரைக்கும் இடையிலுள்ள தூரம் 15 கிலோ மீற்றர் தான்.

எஸ்.டி.டி.ழத் ஒன்றில் வேலை பார்த்து வந்த மகேஸைப் பார்த்ததும் முத்துக் குமாரனுக்கு அவளைப் பிடித்து விட்டது. அதனால் மகேஸின் பெற்றோரிடம் பெண் கேட்டிருக்கிறான்.

மகேஸின் தந்தை கண்ணுச்சாமி தன் மகளைப் பொலிஸில் சேர்க்க வேண்டுமென்று ஆசை. ஆனால் போதிய உயரம் இல்லாததால் மகேஸ் தேர்ந்தெடுக்கப் படவில்லை. முத்துக்குமாரன் மகேஸைப் பெண் கேட்டு வந்த போது, கண்ணுச்சாமிக்கு அவனைப் பிடித்துப் போக, ஒப்புக் கொண்டிருக்கிறான்.

பேச வேண்டியதெல்லாம் பேசி முடித்து, கடந்த ஆவணிமாதம் 6 ஆம் திகதி காளையார் கோவிலில் திருமணமும் கோலாகலமாக நடந்தது.

திருமணம் முடிந்த பின், ஆரம்பத்தில் சந்தோஷமாகத் தான் இருந்திருக்கிறாள் மகேஸ். ஆனால் அந்தச் சந்தோஷம் அதிக நாள் நீடிக்கவில்லை.

முத்துக்குமாரனுக்கு பாப்பா என்றொரு காதலி இருப்பதாக மகேஸுக்குத் தெரிய வந்தது முதல் அதிர்ச்சி. இது பற்றித்தன் பெற்றோரிடம் முறையிட்டிருக்கிறாள் மகேஸ். ஆனால், திருமணமாகி இரண்டு மூன்று மாதங்கள் தானே ஆகியிருக்கிறது. பேசிச் சரிப்பண்ணிவிடலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு. மகளைச் சமாதானப் படுத்தி அனுப்பியிருக்கிறார்கள் அவர்கள். முத்துக்குமாரனின் காதலி பாப்பா திருமணமானவள். அவளது கணவன் துபாயில் இருக்கிறான்.

## ஆடுமேய்க்கும் இலட்சாதிபதி

மகேஸின் கணவன் முத்துக்குமாரனுக்கு பழனிசாமி என்றொரு பங்காளி நண்பன் இருந்திருக்கிறான். தனது உறவில் ஒரு பெண்ணை முத்துக்குமாரனுக்குக் கட்டி வைக்கும் எண்ணம் இருந்திருக்கிறது. அவனுக்கு ஏனென்றால் முத்துக்குமாரன் 500 ஆடுகள் வைத்திருக்கிறான். ஒரு ஆடு குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாவுக்கு விற்கும் என்றால் கூட, கிட்டத் தட்ட 5 இலட்சம் ரூபா சொத்து வைத்திருக்கும் மாப்பிள்ளை முத்துக்குமாரன்.

மகேஸின் பெற்றோரும் குறைவில்லாமல் சீதனம் கொடுத்திருக்கிறார்கள். கட்டில், மெத்தை, கலா ரீ.வி, கிரைண்டர், மிக்ஸி, வாஷிங் மெஷின், காஸ்குக்கர் எல்லாம் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். 9 பவுன் நகையும் கை நிறையக் காசும் கொடுத்திருக்கிறார்கள். வேதனையான வேடிக்கை என்ன வென்றால், இவர்கள் இந்த நவீன சாதனங்களை உபயோகிப்பது வருடத்தில் அதிக பட்சம் 3 மாதங்கள் மட்டும்தான். மற்ற நாட்களில் போகிற இடங்களில் ஓலைக் குடிசைக்குள் விறகு அடுப்பும் மண்ணெண்ணெய் ஸ்டவும் தான். மின்சாரத்தையோ எரிவாயுவையோ நினைத்துக் கூடப்பார்க்க முடியாத எளிய, சிறிய வாழ்க்கை. ஆனால் முத்துக்குமாரனுக்கு இது போதவில்லை. தலை தீபாவளிக்கு வந்தபோது ஒரு மோட்டார் சயிக்கிள் வாங்கி வா என்று மனைவியை நச்சரித்திருக்கிறான். அதற்கும் மகேஸின் பெற்றோர் மறுப்பு ஏதும் சொல்லவில்லை. பொங்கலுக்கு வாங்கித் தருகிறோம் என்று சிறிது அவகாசம் மட்டும் கேட்டிருக்கிறார்கள்.

சம்பவ தினத்தன்று அது ஒரு ஞாயிற்றுக் கிழமை முத்துக்குமாரனின் செல்போன் ஒலிக்க மறுமுனையில் பங்காளி நண்பன் பழனிச்சாமி. ஆச்சரியப்படாதீர்கள் ஆடுமேய்ப்பவனிடம் செல்போனா என்று முத்துக்குமாரன் கி.ராஜ நாராயணன் கதைகளில் வரும் அழுக்கு வேட்டி கட்டிய கீதாரி அல்ல. செல் போன் வைத்திருக்கும் நவீன கீதாரி. நண்பர்கள் இருவரும் அன்று மூக்கு முட்டக் குடித்திருக்கிறார்கள்.

முத்துக்குமாரன் குடித்து விட்டு வீட்டுக்கு வந்ததும் அவனுக்கும் மகேஸிக்கும் சண்டை நடந்திருக்கிறது. பிறகு சமாதானமாகி, மகேஸ் சமைக்கத் தொடங்கியிருக்கிறாள். இதற்குப் பிறகு நடந்ததற்குச் சாட்சிகள் யாருமில்லை. வேடிக்கை பார்த்த சிறுவர்களும், எதேச்சையாக மகேஸிடம் பணம் கொடுத்து வந்த உறவுக்காரர்களும். அக்கம் பக்கத்திலுள்ளவர்களும் தெரிவிக்கும் யு,கங்கள்-தான் கிடைக்கின்றன.

## குடிவெறியும் கொலைவெறியும்

அவர்கள் கூற்றுப்படி, முத்துக்குமாரன் போதையில் இரும்பு அலவாங்கால் மகேஸின் பின்னால் நின்று தலையில் அடித்திருக்கிறான். பின் மண்டையில் அடிபட்டு மூளை சிதறி சரிந்திருக்கிறாள் மகேஸ். வீட்டுக்குள் அவனின் தந்தை கண்ணுசாமி கொடுத்தனுப்பிய அரிசி மூடையும் விறகும் மண்ணெண்ணெய் தகர மும் இருந்திருக்கின்றன.

## மனைவிக்கே தீயிட்ட மாபாதகன்

குடிவெறியிலும் மோட்டார் சயிக்கிள் வாங்கித் தரவில்லை என்ற வன்மத்திலும், பாப்பா என்ற கள்ளக் காதலியின் மீதிருந்த காதலாலும், நண்பன் பழனிசாமியின் தூண்டுதலாலும் காரணம் எதுவாக இருந்தாலும் சரி மகேஸின் காரியம் முடிந்துவிட்டது. மயங்கிச் சரிந்த மகேஸின் முதுகின்மேல் அரிசி மூடை, விறகுக்கட்டை எல்லாவற்றையும் போட்டு மண்ணெண் ணெய் ஊற்றித் தீ மூட்டிவிட்டு அந்த ஓலைக் குடிசையைச் எரித்திருக்கிறான் அவன்.

உள்ளே தீயின் கோர நாக்குகள் தாவுகள் எரிப்பது விறகை அல்ல ஒரு இளம் பெண்ணை என்பது தெரியாமலேயே எரித்து முடித்து விட்டன. எரிந்த போது முத்துக்குமாரனின் வாரிசு இரண்டு மாதக்கருவாக மகேஸின் வயிற்றில் இருந்திருக்கிறது. அதையும் மறந்துவிட்டான் முத்துக்குமாரன்.

தந்தை அனுப்பிய விறகில் மகள் சிதையாக எரிய, அவன் வயிற்றுக்குள் இருந்த சிசுவுக்குத் தன்னை உயிரோடு சிதையில் வைத்தவன் தனக்கு உயிர் தந்த தந்தை என்பது தெரிந்திருக்கவா போகிறது.

தீ வைத்துவிட்டு வெளியே வந்த முத்துக்குமாரன் ஐயோ என் பெண்டாட்டி சாகிறாளே என்று கத்தியிருக்கிறான். அதேசமயம் காப்பாற்ற ஓடி வந்தவர்களையும் தடுத்திருக்கிறான்.

## வினை விதைத்தவன்...

தீ அணைக்க முடியாத அளவுக்கு எரிய ஆரம்பித்ததும் தப்பியோடும் உத்தேசத்தில் ஓடப் பார்த்திருக்கிறான். ஆனால் மகேஸையும் அவன் வயிற்றிலிருந்த இரண்டு மாதச் சிசுவையும் கொல்லும் அளவுக்கு அவனுக்கு வெறியு,ட்டியிருந்த அதே போதை, ஓட முடியாத அளவுக்கு அவன் கால்களைக் கட்டிப்போட சுற்றிச் சுற்றி ஓடியிருக்கிறான். தன்னைத் துரத்திப் பிடிக்க முயன்றவர்களையும் தாக்கியிருக்கிறான்.

## ஊழ்வினை உருத்து வரும்

ஆனால் அடிபட்டுப் போதை கொஞ்சம் குறைந்ததும் பொலிஸ் அவனை அள்ளிக் கொண்டு போய்விட்டது. பொலிஸ் இந்த வழக்கை விசாரித்துக் கொண்டிருக்கிறது.

மகேஸின் தாய்க்கு தன் துக்கத்தைச் சொல்ல வார்த்தைகள் இல்லை. எப்போதும் ஒப்பாரி மூலமே தனது சோகத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறாள்.

தன் கள்ளக் காதலி பாப்பாவை மணப்பதற்காகவோ அல்லது பழனிசாமியின் உறவுக்காரப் பெண்ணை மணந்து கொள்ளவோதான் தனது மகளை முத்துக்குமாரன் கொன்றுவிட்டானென்று குற்றஞ்சாட்டுகிறார் மகேஸின் தந்தை. அப்படித்தான் முத்துக்குமாரன் திட்டமிட்டிருந்தாலும் இப்படிப்பட்ட ஒரு கொலைகாரனோடு அதுவும் தன் கர்ப் பிணி மனைவியைக் கொடூரமாகக் கொன்ற கொடிய மனம் படைத்தவனோடு வாழ்வதற்கு எந்தப் பெண்தான் சம்மதிப்பாள்? சட்டம் தன் கடமையைச்சரிவரச் செய்து கொண்டிருக்கிறது. முத்துக்குமாரனுக்குத் தண்டனை நிச்சயம்.

சிங்கப்பு,ரில் வேலை பார்த்து, வந்த முத்துக்குமாரன் தகப்பனின் சாவுக்குப் பின் குடும்பத்தைப் பார்த்துக் கொள்ளவென்று ஊருக்குத் திரும்பியிருக்கிறான். தன் காதல் மனைவியைக் கொலை செய்து இப் பொழுது சிறையில் இருக்கும் முத்துக்குமாரன் எதைப் பற்றியும் கவலைப்படாமல் ஆடுகளை மேய்த்துக் கொண்டு தினம் தினம் நாளுக்கு ஒரு ஊர் என்று வாழ்ந்து கொண்டிருக்க வேண்டிய காதல் ஜோடியை இந்த நிலைக்குக் கொண்டுவந்தது எது?

இறந்துபோன மகளின் உடலைக் கூடப் பார்க்க முடியவில்லையே என்று புலம்பித் துடிக்கும் தாய் உள்ளத்தின் குமுறலை யாரால் தீர்க்க முடியும்?. □

# 1000 நிரந்தர வீடுகளைஅமைக்க "கெயார்" நிறுவனம் இணக்கம்

(பருத்தித்துறை)

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்குப் பிரதேச மக்களுக்கு கெயார் ஸ்தாபனம் ஆயிரம் நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது.

இதன் முதல் கட்டமாக 384 வீகளை அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் 500 சதுரஅடி கொண்டதான நிரந்தர வீடுகளை அமைக்கும் திட்டத்தில் கெயார் ஸ்தாபனம் ஈடுபட்டுள்ளது.

வடமராட்சி வடககுப் பிரதேச செயலர் பிரிவில் தொண்டைமானாறு தொடக்கம் கற்கோவளம் வரையிலான பகுதிகளில் 384 நிரந்தர வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தில் பருத்தித்துறை கிழக்கில் 102 வீடுகளும் தும்பளை கிழக்கல் 33 வீடுகளும் கற்கோவளத்தில் 28 வீடுகளும் ஆதிகோவிலடியில் 36 வீடுகளும் வல்வெட்டித்துறை வடமத்தியில் 40 வீடுகளும் தொண்டைமானறில் 02 வீடுகளும் வல்வெட்டித்துறை வட கிழக்கில் 06 வீடுகளும் பொலிகண்டி மேற்கில் 10 வீடுகளும் பொலிகண்டி கிழக்கில் 17 வீடுகளும் வியாபாரி மூலையில் 01 வீடும் சுப்பர் மடத்தில் 09 வீடுகளுமாக மொத்தம் 284 நிரந்தர வீடுகளைக கட்டிக் கொடுப்பதற்கு கெயார் ஸ்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.(க-7,35)

# சட்டவிரோத மின்பாவனை;
## பத்துப் பேர் மடக்கிப்பிடிப்பு

(கல்வியங்காடு)

சட்டவிரோத மின்பாவனையை கட்டுப்படுத்தும் நோக்கில் மின்சார சபை ஊழியர்களும் பொலிஸாரும் சுற்றிவளைப்பு நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீ செல்வம் தலைமையிலான பொலிஸ் குழுவினரும் மின்சாரசபை ஊழியர்களும இணைந்தே இந்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கோப்பாய சந்தி, கோப்பாய் மத்தி, இராசவீதி, திருநெல்வேலி பாற்பண்ணை வீதி போன்ற பரதேசங்களைச் சேர்ந்த பத்துப்போ இச் சுற்றிவளைப்பின் போது மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

இவர்க்ளை கடந்த வெள்ளி அன்று யாழ்.நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்த போது எட்டுப்பேரிடம் தலா ஐயாயிரம் ரூபாவதம் குற்றப்பணம் அறவிடுமாறு உத்தரவிட்ட நீதிபதி ஏனைய இருவருக்கும் மின்சார சபையில் ஏற்கனவே மின்சாரத்திற்காக விண்ணப்பித்திருந்த காரணத்திற்காக எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.(க-7,74)

## அவயவ மாற்றுச்சிகிச்சைகளை மேற்கொள்ள
# வெளிநாடுகளில் பயிற்சி பெற்றவர்களின் சேவையையும் பெற்றுக்கொள்ளவேண்டும்

சிறுநீரகம் உட்பட உடல் உறுப்புகளை மாற்றும் சத்திரசிகிச்சைகள தொடர்பான தேசிய கொள்கையின் அவசியம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக ஆராய்ந்து மூன்று மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு இதற்கென அமைககப்பட்ட குழுவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் அனுரத்த பாதினிய தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, கண்டிப் பெரிய ஆஸ்பத்திரிகளில் அவயவ மாற்று சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றுக்கிடையில் ஒருங்கிணைப்பை மேற்கொள்ள வேண்டுமென நேற்று கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் டாக்டர் பாதினிய தெரிவித்திருக்கிறார்.

மேலும் அவர் தகவல் தெரிவிக்கையில், இலங்கையில் இருதய சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளக்கூடிய நிபுணர்கள் 6 பேரே இருக்கிறார்கள். இவர்களில் இரண்டு பேர் தனியார்துறை மருத்துவர்கள். இதனால் வெளிநாட்டில் பயிற்சிபெற்று நாடு திரும்பியிருக்கும் நிபுணர்களின் சேவைகளையும் பெற்றுக்கொள்வதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை, கண்டிப் பெரியாஸ்பத்திரியில் அவசர விபத்துப பிரிவை ஆரம்பிப்பதுடன், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவை அபிவிருத்தி செய்யவேண்டுமெனவும் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் சங்கம் கேட்டுள்ளது. (க-7,5)

# சமையலறை அமைப்பு

(துன்னாலை)

மணற்காட்டிலுள்ள தற்காலிக முகாம்களுக்கான சமையலறையை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமைத்துக்கொடுத்துள்ளது. அத்துடன் கற்கோவளம் பகுதியிலுள்ள முகாம்களுக்கான சமையலறையை தற்போது அமைத்து வருவதாக தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, இப்பகுதியில்' யு.என.எச்.சி.ஆர் அமைத்து வந்த தற்காலிக வீடுகளுக்கான வேலைகள் நிறைவடையாத நிலையில் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகக் கற்கோவள மக்கள் தெரிவிக்கின்றனர். (க-7,113)

# கலாசாரத்தை பேணிப்பாதுகாக்க தமிழ் மக்கள் முன்வரவேண்டும்
## அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன்

(கொழும்பு)

"யாழ்.குடாநாட்டு மக்களின் வாழ்க்கை முலாம் பூசப்பட்டதாகவே காணப்படுகிறது. அந்நிய சக்திகளால் அது திட்டமிட்டு திசை திருப்பப்படுகிறது" இவ்வாறு தெரிவித்தார் யாழ்.நல்லூர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன். கடந்த வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் யாழ்.மாநகரசபை ஆணையாளர் க.குணராசா தலைமையில் யாழ். மாநகரசபை வளாகத்தில் நடைபெற்ற மேதினம் தொடர்பான கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

செழியன் மேலும் பேசுகையில்,

விடுதலையை வென்றெடுப்பதில் எமது தலைமை ஆணித் தரமாக செயற்பட்டு வருகின்றது. போராட்டத்தால் தான் வெற்றியை அடையமுடியுமென்பது எமது மனதில் ஆழப்பதிந்துள்ளது.

சாவைக்கண்டு அஞ்சாத நாம் தற்போது ஏதோ ஒரு மயக்கத்திற்குள் ஆட்பட்டிருக்கின்றோம். தொலைக்காட்சித் தொடர்கள், திரை அரங்குகளென வசதி வாய்ப்புகள் பெருகிவிட்டதாக நாம் நினைக்கிறோம். ஆனால் முன்னய கர்லங்களில் யாழ்ப்பாணத்தில் எட்டுக்கும் மேற்பட்ட திரை அரங்குகள் இருந்தன.

இன்று குடாநாட்டு மக்களின் வாழ்க்கை முலாம் பூசப்பட்ட வாழ்க்கையாக இருக்கிறது. பாடசாலை மாணவன் ஒருவன் தனது ஆசிரியையிடமே தவறான முறையில் நடந்திருக்கிறான். இப்படியே போனால் தமிழினம் நிச்சயம் அழியும்.

ஆயிரக்கணக்கான போராளிகளை இழந்த நிலையிலும் நாம் பொறுமையுடன் விடுதலைப் போராடடததை சாதித்திருக்கிறோம்.

முகமாலையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான கண்டி வீதியில் பல காவலரண்கள் காணப்படுகின்றன. ஆயுதங்களுடன் இராவத்தினர் உடற்பயிற்சி செய்கின்றனர்

ஆனால் முகமாலையில் இருந்து புளியங்குளம்வரை துப்பாக்கி இல்லாமலும் முகாம்கள் இல்லாத நிலையிலுமே போராளிகள் உள்ளனர்.

கடந்த மூன்று ஆண்டுகளாக் யுத்தமும் இல்லாது, சமாதான முன்னெடுபபுகளும் இல்லாத நிலையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். எந்த நாடும் எமக்கு உதவி செய்வதில்லை. மக்களே எமக்கு நிதியை வழங்குகிறார்கள். எனவே நாம் அந்நிய நாடுகளுக்கு பயப்பட வேண்டியதில்லை. ஆனால் மக்கள தங்கள் மயககத்திலிருந்து விடுபட வேண்டும். ஆயுதம் ஏந்தினால் தான வாழ முடியும் என்பதை சிங்களதேசம் தற்போது உணர்த்தி வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் தற்போது கலாசாரச சீரழிவுகள் அதிகரித்து காணப்படுகிறது. நீலப்படம், கஞ்சா, பபர், சிகரட் போன்றவை தற்போது அதிகரித்துள்ளன. போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்து இலட்சியத்துடனேயே தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது.

மேதின ஊர்வலத்தின் மூலம் யுத்தம் இல்லாமல் இராணுவத்தை விரட்ட முடியும் என்பதை நாம் சர்வதேசத்திற்கு உணர்த்துவோம். (க-7,5)

# இராசி பலன்

**02.05.2005**
**(சித்திரை 19, திங்கட்கிழமை)**
**நவமி முன்னிரவு 10.18 மணிவரை**
**அவிட்டம் முன்னிரவு 10.39 மணிவரை**
**இராகுகாலம் 7.27 - 8.57 மணிவரை**
**சுபநேரம் 11.57 - 1.27 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | எடுத்தகாரியம் கைகூடும், பெருமையான சம்பவம், தொழில் வருமானம், போசன சுகம். |
| இடபம் | அதிகாரம், செய்தொழில் விருத்தி, தடைப்பட்ட காரியம் கைகூடும், நண்பர்கள் சந்திப்பு, சுப நிகழ்வு. |
| மிதுனம் | புதிய திட்டமிடல், பிரயாணம், சரீரப் பிரயாசை, கட்டுப்பாடு. |
| கடகம் | ஆரோக்கியக் குறைவு, வீண்பகை, முயற்சி தடங்கல், திருடர் பயம். |
| சிங்கம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, களஸ்திர நன்மை, காரிய அனுகூலம், அபுர்வ சந்திப்பு. |
| கன்னி | சுவாரஸ்யம், தேக நலன், நல்லமுயற்சி, பகைவரால் நன்மை. |
| துலாம் | குடும்பக் கவலை, காரியதாமதம், உடல் நலக்குறை, வேலைச்சுமை. |
| விருச்சிகம் | மனச் சஞ்சலம், ரோகநிலை, முயற்சி தாமதம், திடீர் நன்மை. |
| தனுசு | கூட்டு முயற்சி, சகோதரர் உதவி, நல்ல வருமானம், போசனசுகம். |
| மகரம் | வாக்குவாதம், முயற்சி தாமதம், போசன சுகக்குறைவு, உறவினர் உதவி. |
| கும்பம் | சிந்தனை மிகுதி, புதிய முயற்சி, போசன சுகம், பெரியோர் உதவி. |
| மீனம் | பிரயாணம் காரியசிந்தை, சுபசெலவு, ஆரோக்கியக்குறைவு. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

**-வளவன்**

# அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதி உதவியுடன் முல்லை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவோம்
## சதாசிவம் கனகரத்தினம் எம்.பி உறுதியளிப்பு

(முல்லைத்தீவு)

கடந்த 15 வருடங்களுக்கு முன் முல்லைத்தீவு நகர மக்களின் இயலபு வாழ்க்கை இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சிதைந்து சீரழிக்கப்பட்டது. அம் மக்கள் தங்கள் சகல சொத்துக்களையும், தொழில்களையும் இழந்து நிர்க்கதியான நிலையில் அகதிகளாக அயற் கிராமங்களிலே தஞ்சமடைநதிருந்து, கடந்த ஆண்டு தான் தங்களின் சொந்த இடங்களில் படிப்படியாகக் குடியேறத் தொடங்கினார்கள். இவ்வேளையிலேயே தான் சுனாமிப் பேரழிவு நொந்து போயிருந்த அவர்களின், வாழ்க்கையை, இருப்பிடததை, தொழில்களையெல்லாம் மணணோடு மண்ணாக்கிவிட்டது. தொழில் இழந்த இம்மக்களின் வாழ்க்கையை வளமாக்கவே மீன்பிடித் தொழிலுக்கு அத்தியாவசியமான உபகரணங்களை வழங்குகின்றோம். இவ்வாறு தெரிவித்துள்ளார் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு நகர மக்களுக்கு வழங்கவென நோர்வே, ஜேர்மன் நாடுகளால் தமிழர் புனர்வாழ்வுக் கழக மூலம் வழங்கப்பட்ட உதவி நிதி மூலம் 35 மீனவக்குடும்பங்களுக்கு தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இயந்திரம், வலை, வள்ளம் என்பவை வழங்கும் வைபவம் அணமையில் முல்லைத்தீவில் எஸ்.பரமானந்தம் தலைமையில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு பேசியபோதே வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் இவ்வாறு தெரிவித்தார்.

இந் நிகழ்வுக்கு முன்னராக கடல் புலிகளின் முல்லை நகரத் தளபதி தினேஸினால் தேசியக் கொடியும் விக்கினத்தினால் தமிழர் புனர்வாழ்வுக் கொடியும் ஏற்றப்பட்டன. முல்லைத்தீவு மாவட்ட உதவி அரசங்க அதிபர் ஆரணியினால் பொதுச்சுடர் ஏற்றிவைக்கப்பட்டதைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாயின.

இந்நிகழ்வில் கனகரத்தினம் தொடர்ந்து உரையாற்றுகையில், முல்லை நகர மக்கள் வழமைபோல் இழந்த தங்கள் தொழில்களையெல்லாம் மீண்டும் ஆரம்பிப்பதற்கு நாம் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாக வெளிநாட்டு உதவிகளைப்பெற்று இம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான சகல வகையான வேலைத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தவுள்ளோம் என்றார்.

இந்நிகழ்வில், இரண்டாவது உறுப்பினர்களுக்கான உபகரணங்களை துணை அரசியல் பொறுப்பாளர் சுதாவும், மூன்றாவது உறுப்பினர்களுக்கான உபகரணங்களை கடல் தொழிலாளர் சமாசத்தலைவர் மரியும் வழங்கினார்கள்.

முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர், மூர்த்தி, கடற்புலிகளின் நிர்வாகப் பொறுப்பாளர் வினாயகம், கிருபா, அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர் சிவனடியான் ஆகியோரும் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

(து-128)

# மீள்பார்வை

## பிறியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

## (தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 55



(3) குழு காலத்திற்குக் காலம் பொதுவாக எந்தவொரு திணைக்களத்தினதும் உள்ளூர் அதிகாரசபையினதும் பரிசோதிக்கப்பட்ட கணக்குகள், நிதியங்கள், நிதி நடைமுறைகள், செயற்பாடும் நிருவாகமும் என்பவை பற்றியும் அவற்றினின்று எழும் எந்தவொரு விடயம பற்றியும் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(4) குழு அவசியமெனக் கருதுமிடத்து அதன் உறுப்பினர்களைக் கொண்ட உப குழுக்களை நியமிக்கலாம். அவை குழுவால் பணிக்கப்படும் வகையில் அத்தகைய திணைக்களங்கள், உள்ளூர் அதிகாரசபைகள் ஆகியவற்றின் எல்லாக் கணக்குகளையும், நிதியங்களையும், நிருவாகத்தையும் பரிசோதித்து குழுவிற்கு அறிக்கையிடும்.

(5) குழு அல்லது அதன் உப குழுக்களின் ஏதாவதொன்று தன் கடமைகளை நிறைவேற்றுவதற்காக எந்தவோர் ஆளையும் அதன் முன் வரவழைப்பதற்கும் கேள்வி கேட்பதற்கும் எந்தவொரு பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது பிற ஆவணத்தை கேட்டுப் பெறுவதற்கும் பரிசோதிப்பதற்கும் களஞ்சியங்கள் சொத்துக்கள் முதலியவற்றைப் பார்வையிடவும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(6) குழுவின் கூட்டநடப்பெண் நான்கு உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

126. அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு - (1) தெரிவுக்குழுவால் நியமிக்கப்படும் (பன்னிரண்டு உறுப்பினர்களை உள்ளடக்கிய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு எனப்படும் குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களினதும் எழுத்து மூலமான எச்சட்டத்தின் கீழும் அரசாங்கத்திற்கு உடமையாக்கப்பட்ட ஏதேனும் வியாபாரம் அல்லது ஏனைய முயற்சிகளினதும் கணக்குகளை அவை பற்றிய கணக்குப் பரிசோதகர் தலைமையதிபதியின் அறிக்கைகளுடன் பரிசோதிப்பது இக்குழுவின் கடமையாதல் வேண்டும்.

(3) குழு காலத்திற்குக் காலம் பொதுவாக எந்தவொரு அரசாங்கக் கூட்டுத்தாபனம் அல்லது எழுத்துமூலமான எச் சட்டத்தின் கீழும் அரசாங்கத்திற்கு உடமையாக்கப்பட்ட ஏதேனும் வியாபாரம் அல்லது ஏனைய முயற்சிகள் ஆகியவற்றின் பரிசோதிக்கப்பட்ட கணக்குகள், வரவுசெலவுத் திட்டங்கள், வருடாந்த மதிப்பீடுகள், நிதியங்கள், நிதி நடைமுறைகள், செயற்பாடும் நிருவாகமும் என்பவை பற்றியும் அவற்றின்று எழும் எந்தவொரு விடயம் பற்றியும் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(4) குழு அவசியமெனக் கருதுமிடத்து அதன் உறுப்பினர்களைக் கொண்ட உப குழுக்களை நியமிக்கலாம். அவை குழுவால் பணிக்கப்படும் வகையில் அத்தகைய அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் அல்லது எழுத்து மூலமான எச்சட்டத்தின் கீழும் அரசாங்கத்திற்கு உடமையாக்கப்பட்ட வியாபாரம் அல்லது ஏனைய முயற்சிகளின் எல்லாக் கணக்குகளையும் வரவு செலவுத் திட்டங்கள், வருடாந்த மதிப்பீடுகளையும், நிதியங்களையும், நிருவாகத்தையும் பரிசோதித்து குழுவிற்கு அறிக்கையிடும்.

(5) குழு அல்லது அதன் உப குழுக்களின் ஏதாவதொன்று தனது கடமைகளை நிறைவேற்றுவதற்காக எந்தவோர் ஆளையும் அதன்முன் வரவழைப்பதற்கும் கேள்வி கேட்பதற்கும் எந்தவொரு பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது பிற ஆவணத்தைக் கேட்டுப் பெறுவதற்கும் பரிசோதிப்பதற்கும் களஞ்சியங்கள், சொத்துக்கள் ஆகியவற்றைப் பார்வையிடுவதற்கும் அதிகாரம் உடையதாயிருத்தல் வேண்டும்.

(6) குழுவின் கூட்ட நடப்பெண் நான்கு உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

127. சிறப்புரிமைகள் பற்றிய குழு- பிரேரணை கொண்டுவரப்பட்டு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதன் பேரில் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும் ஒவ்வொரு சிறப்புரிமை பற்றிய பிரச்சினையையும் பரிசீலனை செய்வதற்காகவும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உண்மைகளைக் காட்டி சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதா என்பது பற்றித் தீர்மானிப்பதற்கும் அவ்வாறெனில் மீறலின் தன்மை அது ஏற்படக் காரணமாயிருந்த சூழ்நிலைகள் ஆகியவற்றைத் தீர்மானிப்பதற்கும் விதப்புரைகளைச் செய்வதற்கும் குழு பொருத்தமானதெனக் கருதக் கூடியதான அத்தகைய விதப்புரையைச் செயற்படுத்தப் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையைக் கூறவும் தெரிவுக் குழுவினால் நியமிக்கப்படும் பத்துக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்ட சிறப்புரிமைகள் பற்றிய குழு எனப்படும் குழுவொன்று இருத்தல் வேண்டும். அதற்கு ஆற்றுப்படுத்தப்படும் ஒவ்வொரு பிரச்சினையினதும் அறிக்கையை கூடிய விரைவில் பாராளுமன்றத்துக்குக் குழு சமர்ப்பித்தல் வேண்டும். குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக முழுமையான விசாரணையை நடத்துவதற்குத் தேவையான எவரேனும் ஆட்கள் ஏதேனும் ஆவணங்கள் அல்லது இதர பதிவேடுகள் ஆகியவற்றை வரவழைப்பதற்கும் மற்றும் எல்லா நடவடிக்கைளை எடுப்பதற்கும் குழு அதிகாரம் பெற்றிருக்கும்.

128. பொது மனுக்குழு - (1) தெரிவுக்குழுவால் பெயர் குறித்து நியமிக்கப்படும் பத்து உறுப்பினர்களைக் கொண்டமைவதும் பொது மனுக்குழு என்றழைக்கப்படுவதுமான குழு ஒன்று இருத்தல் வேண்டும்.

(2) 25 அ (10) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின் கீழ் அதற்கு ஆற்றுப்படுத்தப்படும் மனுக்களைப் பரிசீலிப்பது இக்குழுவின் கடமையாதல் வேண்டும்.

(3) பகிரங்க அலுவலொருவரால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம், உள்ளூர் அதிகாரசபை அல்லது இவற்றையொத்த பிற நிறுவனம் ஒன்றின் அலுவலொருவரால் அடிப்படை உரிமை ஒன்று மீறப்படுதலை அல்லது வேறு அநீதி அழைக்கப்படுதலை மனு எதுவும் வெளிப்படுத்துகின்றது என்று குழு கருதுமிடத்து விசாரித்து, அறிக்கை சமர்ப்பிக்கப்படும்படி அத்தகைய மனுவை, நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளரிடம் (ஒம்புட்சுமன்) ஆற்றுப்படுத்தலாம்.

(4) நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளருக்குக் குழு ஆற்றுப்படுத்திய மனு ஒன்று தொடர்பில் அவரின் விசாரணைகள் முடிவுற்றதன் மேல், அவர் குழுவுக்குச் சமர்ப்பித்த அறிக்கையைப் பரிசீலித்த பின்னர் அத்தகைய அறிக்கையின் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை மீதான தனது அபிப்பிராயத்தைக் குழு பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடலாம்.

(5) குழுவானது, அதற்கு ஆற்றுப்படுத்தப்படும் மனுக்கள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை மீது அதனது அபிப்பிராயத்தை அத்தகைய மனுக்களின் மீது தகுந்ததென அது காணும் அத்தகைய வேறு அவதானிப்புகளுடன் சேர்த்துக் காலத்துக்குக் காலம் பாராளுமன்றத்துக்கு அறிக்கை செய்தல் வேண்டும்.

(6) குழுவான்து, அது அவசியமானதெனக் கருதும்போது, குழு பணிக்கக்கூடியதான அத்தகைய மனுக்கள் அல்லது அறிக்கைகள் மீது பரிசீலனை செய்து குழுவுக்கு அறிக்கை செய்யவென அதனது உறுப்பினர்களின் உப குழுக்களை நியமிக்கலாம்.

(7) தனது கடமைகளைப் புரிவதற்கு அல்லது உப குழுக்கள் எந்தவோர் ஆளையும் தன்முன் அழைக்கவும் விசாரிக்கவும், ஏதேனும் பத்திரம், புத்தகம், பதிவேடு அல்லது பிற ஆவணத்தைக் கேட்டுப் பெறவும் பரிசீலனை செய்யவும் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், களஞ்சியங்களையும் ஆதனங்களையும் பார்வையிடுவதற்கும் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

(8) குழுவின் கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

128 அ.உயர் பதவிகள் பற்றிய குழு-

(1) அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டு ஏதேனும் ஒரு பதவிக்கு நியமிக்கப்பட்ட அல்லது பதவி எதனையும் வகிப்பதற்குப் பெயர் குறிப்பிடப்பட்ட, ஆள் எவரதும் தகுதியை ஆராய்ந்து அவரைப்பற்றி விதப்புரை செய்வதற்குத் தெரிவுக் குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்ட பன்னிரண்டுக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்ட உயர் பதவிகள் பற்றிய குழு எனப் பெயர் கொண்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.(2) இக்குழு அதன் கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு, ஆள் எவரையும் அல்லது வேறு ஆவணத்தையும் வரவழைத்து ஆராயவும், மேலே (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆளின் ஏற்புடமை பற்றிய முழுமையான நுண்ணாய்வு செய்வதற்கு அவசியமான எல்லாச் செயல்களையும் செய்வதற்கும் தத்துவம் பெற்றதாகவிருக்கும்.

(தொடரும்)

# 13 இந்தியப் பிரஜைகளையும் நாடு கடத்துமாறு உத்தரவு

(கொழும்பு)

கடந்த வியாழக்கிழமை இரவு மட்டக்களப்பு மாவட்ட களுதாவளை மற்றும் குருக்கள் மடம் ஆகிய இடங்களில் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 13 இந்தியப் பிரஜைகளையும் உடனடியாக நாடு கடத்துமாறு மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக விசா இன்றி சட்ட விரோதமான முறையில் குடும்பங்களுடனும் தனியாகவும் தங்கியிருந்து சீவல் தொழிலில் இவர்கள் ஈடுபட்டு வந்துள்ளார்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்த பெரியநாயகம் அந்தோனிசாமி (வயது-33) இவரது மனைவி எலிசபெத்ராணி (வயது-23), இவர்களது இலங்கையில் பிறந்த குழந்தை கனிஸ்டன் (வயது-1) ஆரோக்கியம் சவரிமுத்து (வயது-40) அவரது மனைவி ஜான்சி (வயது-33) மகள் செலின்மேரி (வயது-13), மகன்மார் செபஸ்ரியன் (வயது -10), செல்வராஜா (வயது-5) மற்றும் அந்தோனி சாமிக்கண்ணு (வயது-33) அருளானந்தம் குழந்தை (வயது -40) முத்தையா கனேசன் (வயது -57), மருதன் சேதுமாரி (வயது41) ஆரோக்கியம் சேவயர் (வயது-40) ஆகியோரே குறிப்பிட்ட இந்திய பிரஜைகளாவர். குறிப்பிட்ட இந்திய பிரஜைகளை குடியகல்வு, குடிவரவு திணைக்கள அதிகாரிகள் ஊடாக நாடு கடத்துமாறு மாவட்ட மேலதிக நீதிபதி எம்.எச்.எம். அஜமீர் உத்தரவிட்டுள்ளார்.

நாளை இவர்களை சட்டவிரோத குடியேற்றக்காரர் தடுப்பு முகாமில் இதற்காக ஒப்படைத்து இதுபற்றிய அறிக்கையை 9ஆம் திகதி நீதி மன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அந்த உத்தரவில் நீதிபதி குறிப்பிட்டுள்ளார். (ற-4)

# ஊடகவியலாளர் சிவராமின் கொலையை ஈ.பி.டி.பி வன்மையாகக் கண்டிக்கின்றது

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கில் மாத்திரமலாது தென்னிலங்கையையும் ஆக்கிரமித்துள்ள அரசியல்வாதிகளினதும், ஊடகவியலாளர்களினதும் கொலைச் சம்பவங்கள் மிகவும் கவலை அளிப்பதாகவே உள்ளன. இந்த வகையில் முன்னாள் புளொட் உறுப்பினரான தராகி என அழைக்கப்படும் தர்மரட்ணம் சிவராமின் கொலையும் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இவ்வாறு ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில்,

கருத்துக்களைக் கருத்துக்களால் எதிர்கொள்ள முடியாத கோழைகளின் செயலே ஊடகவியலாளர்களின் உயிர்களை காவு கொள்கின்றன. இலங்கை நாடு ஒரு ஜனநாயக பாரம்பரியத்தைக் கொண்டது என்ற அடிப்படையில் இங்கு கருத்து சொல்லும் உரிமை சகல இலங்கைப் பிரஜைகளுக்கும் உள்ளது.

ஊடகவியலாளர்கள் மீது கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளைப் போலவே இப்பொழுது கொழும்பில் வைத்து கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட இராணுவ ஆய்வாளரும் ஊடகவியலாளருமான தராகி சிவராமின் கொலையும் ஜனநாயக மரபுகளையும் மனித உரிமைகளையும் மீறும் ஒரு செயல் என்பதில் எந்தவித மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை.

இன்று தமிழர்களின் அரசியலில் தொற்று நோயாக பீடித்து வரும் கொலைக் கலாசாரம் ஒரு முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்பதே ஜனநாயகவாதிகளினதும் மனித நேயர்களினதும் சாதாரண மக்களினதும் வேண்டுகோளும், எதிர்பார்ப்பும் ஆகும்.

ஈ.பி.டி.பியினர் ஆகிய நாம் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கும் படுகொலைகளைக் கண்டித்தே வந்துள்ளோம். அந்தவகையில், ஊடகவியலாளர் சிவராமின் கொலையையும் வன்மையாகக் கண்டிப்பதுடன் சிவராமின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த துயரங்களைப் பகிர்ந்து கொள்கிறோம் எனவும் தெரிவித்துள்ளார். (க)

# பொதுக்கட்டமைப்பில் புலிகள்; நாடு பிளவுபடுவதை ஊக்குவிக்கும்

(கண்டி)

தேசிய பிக்கு முன்னணியைச் சேர்ந்த பிரதிநிதிகள் நேற்று முன் தினம் மல்வத்தை மகாநாயக்க தேரரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இச் சந்திப்பையடுத்துக் கருத்துத் தெரிவித்த பிக்கு முன்னணியின் பிரதித் தலைவர், சுனாமிப் பேரழிவு நிவாரண நடவடிக்கைகளில் விடுதலைப்புலிகளை அரசாங்கம் இணைத்துக்கொள்ளும் திட்டத்திற்கு பிக்கு முன்னணி ஒருபோதும் ஆதரவு வழங்காது எனத் தெரிவித்தார்.

அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் இணைந்த பொதுக் கட்டமைப்பு நாடு பிளவுபடுவதையே ஊக்குவிக்கும். தனிநாட்டினை விடுதலைப்புலிகள் அடைவதற்கே இது வழிவகுக்கும். இதனை அடிப்படையாக வைத்தே விடுதலைப் புலிகள் பொதுக்கட்டமைப்பினைக் கோருகின்றார்கள்.

எனவே விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பொதுக்கட்டமைப்பினை செய்துகொள்ள நாங்கள் அனுமதிக்கமாட்டோம் எனத் தெரிவித்தார். நாட்டில் சமாதானம் ஏற்பட்டு நாடு முன்னேற்றமடைவதையே நாங்கள் விரும்புகின்றோம் அதே போல் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதையும், பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் புனரமைப்பதையுமே நாங்கள் விரும்புகின்றோம். ஆனால் விடுதலைப் புலிகள் ஊடாகத்தான் அதனை வழங்க முடியும் என்றால் அதனை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

நாங்கள் சமாதானத்தையோ, பொதுக்கட்டமைப்பையோ வெறுக்கவில்லை. நாங்கள் பயங்கரவாத அமைப்பான விடுதலைப் புலிகளையே வெறுக்கின்றோம்.

எமது நிலைப்பாட்டினை ஏற்கனவே அரசுக்கு அறிவித்துள்ளோம். அதனையும் மீறி அரசு பொதுக் கட்டமைப்பினை உருவாக்குவோமானால் நாங்கள் வீதியில் இறங்கிப் போராடுவோம் என எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பாக மகாநாயக்க தேரா தாம் ஜனாதிபதியிடம அறிக்கை ஒனறை வழங்கவுள்ளதாகவும அரசாங்கம் தமது நிலைப்பாட்டினை அறிந்து செயற்படும் எனவும் தெரிவித்தார். (க-7-4)

# உள்ளூராட்சி தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது

(சாவகச்சேரி)

யாழ். மாவட்டத்தில் உள்ள பதினோரு மாநகர, நகர, பிரதேச சபைகளுக்கான தலைவர் உறுப்பினர்களை தேர்வு செய்வதற்கான உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தல் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் இருபத்தைந்தாம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் க. கணேஷ் அறிவித்துள்ளார்.

இத்தேர்தல் கடந்த மாதம் இருபத்து மூன்றாம் திகதி நடைபெற இருந்தது குறிப்பிடத்தக்கது. (க-7-21)

# ஊடகவியலாளர் சிவராம் கொலைக்கு ஜனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும்

## அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு

மூத்த ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் கொடூரமான முறையில் படுகொலைசெய்யப்பட்டமையை அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டித்திருக்கின்றது. சிவராமை இழந்து தவிக்கும் அவரது துணைவியார் மற்றும் பிள்ளைகளின் துயரங்களில் தாம் பங்குகொள்வதாகவும் அனைதுலகத் தமிழ்கள் சார்பில் தமிழர் கூட்டமைப்பு தெரிவித்திருக்கின்றது.

இது தொடர்பாக அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இந்தப் படுகொலை பாதுகாப்புப் படைகளின் தீவிரமான கண்காணிப்புக்கள் நிறைந்த உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இடம் பெற்றுள்ளது. இதனால் முப்படைகளின் தளபதியாகிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவே இந்தப் படுகொலைக்கு பொறுப்பேற்க வேண்டும்.

நிமலராஜன், நடேசன், குமார் பொன்னம்பலம், சந்திரநேரு போன்ற பல தமிழ்த்தேசிய ஊடகவியாளர்களும் மனிதஉரிமை செயற்பாட்டாளர்களும் இவரின் ஆட்சிக்காலத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களில் வைத்துக் கொல்லப்பட்டுள்ளனர்.

சிவராம் இரு மொழிகளில் செயற்படும் திறமைவாய்ந்த மூத்த ஊடக வியலாளர். தமிழ் நெற் ஊடாக உலகளாவிய ரீதியில் வாசகர்களை அவரது செய்திகள் சென்றடைந்தன டெய்லி மிரர் ஊடாக இலங்கையின் ஆங்கில வாசகர்களையும் எண்ணற்ற வாராந்த நாளந்த ஊடகங்கள் ஊடாக தமிழ் பேசும் மக்களையும் அவரது செய்திகள் சென்றடைந்தது.

சர்வதேச மன்றுகளில் அவர் இலங்கை தொடர்பான வெளிப்பிடையான விமர்சகனாகத் திகழ்ந்தார். ஆயினும் கருத்துச சுதந்திரம் எனும் வரை முறைக்குள் நின்றவாறே செயற்பட்டு வந்தார். மட்டக்களப்பு அம்பாறைப் பகுதிகளில் பாதுகாப்புப் படைகளும் உளவுத்துறையும் துணைப்படைகளும் மேற்கொண்டுவந்த படுகொலைகள் தொடர்பாக அரச பகிரங்கமாக சிவராம் விமர்சித்து வந்தார்.

2001ஆம் ஆண்டு சிவராம் தாக்கப்பட்டு அவரது ஊடகப்பணிமனையும் இராணுவ உளவுத்துறையினரால் தாக்கி சேதப்படுத்தப்பட்டதனால் கொழும்புக்குத் தப்பிச்சென்று வாழ்ந்துவந்தார். அவர் தனது கருத்துக்களை துணிச்சலாக வெளிப்படுத்திய போதெல்லாம அரச படைகளின் அச்சுறுத்தல்களுக்குள்ளானார்.

2004ஆம ஆண்டு தனக்கு ஏற்பட்ட உயிராபத்து தொடர்பாக அனைத் துலக ரீதியான முறைபபாட்டையும் செய்திருந்தார். அவரது இழப்பானது மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியாலர்களுக்கு ஒரு கொலைக் களமே என்பதை நிரூபித்துள்ளது.

தமிழர்களின் சுய உரிமைகளுக்காக ஆயுதமேந்திய சிவராம் பின்னா ஒரு முழுமையான ஊடகவியலாளனாக வாழ்ந்தார். அவர் தனது பேனாவை தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்காக வலுவாக பாவித்து வந்தார். இன்று ஒரு மூத்த ஊடக வியலாளனின் பேனா எதேச் அதிகாரத்தின துப்பாக்கியால் உறங்குகின்றது.

இவ்வேளையில் அமைதியை விரும்பும் சர்வதேச நாடுகள் தமிழ் புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் மனிதஉரிமை ஆர்வலர்களை அழித்தொழிக்கும் அரசின் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த உதவ வேண்டும் என அவ் வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிவராமின் படுகொலை தமிழினத்தையே எச்சரிக்கிறது

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

தமிழினத்தின் சிறந்த ஊடகவியலாளர் சிவராம் (தராகி) கொலை செய்யப்பட்டமை அரசினதான் தோன்றித்தனமான செயலை சுட்டிக்காட்டி நிற்கின்றது. அரசின் ஏற்பாடு முறையானது பத்திரிகைத் துறையைச் சூழ்ந்த போதும் தமிழினத்துக்காக தமிழரின் ஒடுககுமுறையை வெளியுலகிற்கு வெளிப்படுத்தியவரான சிவராமை அரச புலனாய்வுத்துறையினரும், தமிழ் விரோத குழுக்களும் இணைந்து கொலை செய்தமை பத்திரிகைத் துறையை மட்டுமல்ல தமிழினத்தையும் எச்சரிக்கும் நடவடிக்கையாகவே அமைகிறது.

இவ்வாறான ஜனநாயக விரோத நடவடிக்கையை யாழ்.பல்கலைக் கழகம் வன்மையாகக் கண்டிப்பதுடன் டி.சிவராமை இழந்துநிற்கும் அவரது குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறது. (க)

# ஊடகவியலாளர் சிவராமின் படுகொலைக்கு வவு.பொது அமைப்புக்கள் ஒன்றியம் கண்டனம்

(வவுனியா)

இன்றைய அமைதி சூழலில் ஊடகவியலாளர் சிவராமின் கோரக் கொலைச் சம்பவமானது ஜனநாயகத்திற்கும் கருத்து சுதந்திரத்திற்கும் பத்திரிகை தர்மத்திற்கும் விடுக்கப்பட்டுள்ள பெரும் சவாலாகவும் மரண எச்சரிக்கையாகவும் கருதவேண்டியுள்ளது.

இவ்வாறு சிவராமின் கொலை குறித்து வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்ட கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் சிவராமைக் கொலைசெய்த குற்றவாளிகள் இனம் காணப்பட்டு அவர்கள் சட்டத்திற்கு முன்னர் நிறுத்தப்பட்டு கடும் தண்டனை வழங்கப்படவேண்டுமெனவும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**வவு.மாணவர் கண்டனம்**

இதேவேளை, சிவராம் படுகொலையை வவுனியா பல்கலைக் கழக வளாக மாணவர்களது ஒன்றியமும் வன்மையாகக் கண்டித்துள்ளது.

அணமைக்காலங்களாக ஊடகவியலாளர்களது பேனாக்களின் முனைகள் ஒவ்வொன்றும் கழன்று கொண்டிருக்கின்றன எனவும் இவ்வாறு எமது தேசத்தின் புத்திஜீவிகள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றமை எதிர்காலத்தில் தமிழ் சமுதாயம் இருண்ட தளத்தில் பயணிப்பதற்கு அத்திவாரம் இடுகின்றன என்றும் வளாக மாணவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# தொடரும் படுகொலைகளை உடன் நிறுத்தி ஜனாதிபதி நேர்மையுடன் செயற்படவேண்டும்

## யாழ்.ஊடகவியலாளர் சங்கம் ஜனாதிபதிக்கு மகஜர்

மூத்த ஊடகவியலாளர் டி.சிவராமின் கொலையினை வன்மையாகக் கண்டிப்பதுடன் தொடரும் படுகொலைகளை நிறுத்தி நேர்மையுடன் செயற்படுமாறு ஜனாதிபதியை யாழ்.ஊடகவியலாளர் சங்கத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

யாழ். அரச அதிபர் ஊடாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுககு நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ள மகஜரிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் பத்திரிகையாளர்களை படுகொலை செய்யும் கலாச்சாரம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியிலேயே தொடர்ந்த வண்ணமுள்ளது. முதலில் நிமலராஜனும் பின்னர் நடேசனும் இறுதியாக (தராகி) சிவராமும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தக் கொலைகள் அனைத்திற்கும் ஜனாதிபதியே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும். ஜனாதிபதியால் அரவணைத்து வைக்கப்பட்டுள்ள ஆயுதக குழுக்களையும் படையினரது புலனாய்வுத்துறையினரையும் பயன்படுத்தி இந்தப் படுகொலைகள் அரங்கேற்றப்பட்டுள்ளன. எனவே தொடரும் படுகொலைகளை நிறுத்தி நேர்மையுடன் நடக்குமாறு ஜனாதிபதியை கேட்டதுடன் இத்தகைய படுகொலைகளையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (க)

# வடமராட்சி வடக்கில் 1076 தற்காலிக வீடுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென ஆயிரத்து 76 தங்காலிக வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவ் வீடுகளில் அமைக்கும் பணி 70வீதம் முடிந்துள்ளன.

வடமராட்சி பிரசேத்தில் தொண்டமானாறு தொடக்கம் கற்கோவளம் வரையான 16 கிராமங்களில் இத் தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டுவருகின்றன. இப் பகுதியில் மேலும் 525 தற்காலிக வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இத் தற்காலிக வீடுகளை கியூடெக், யு.என்.எச்சி.ஆர் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களே அமைத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-7,35)

# மிலிந்த ஜனாதிபதியை வாரஇறுதியில் சந்திப்பார்

## எஸ்.பியின் விடுதலை குறித்து பேசுவாராம்

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் இரண்டு வருடகால சிறைத்தண்டனையைப் பெற்று தற்போது சிறையில் இருக்கும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவை விடுதலை செய்வது தொடர்பாக ஜனாதிபதியுடன் உரையாடுவதற்காக கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட வார இறுதியில் ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எஸ்.பி.திஸநாயக்க குறித்து ஐக்கிய தேசியக் கட்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமையவே மொறகொடவின் இச்சந்திப்பு நடைபெறவுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் பீடம் பல தடவைகள் விரிவாக கலந்தாலோசனை செய்தது. இதன் போதே எஸ்.பி.திஸநாயக்கவின் விடுதலை தொடர்பாக ஜனாதிபதியிடமிருந்து சாதகமான ஒரு பதிலைப் பெற்றுக் கொள்வதற்காக மிலிந்த மொறகொட ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் கோரிக்கை ஐக்கிய தேசியக்கட்சித் தலைவரிடம் முன்வைக்கப்பட்டது. இக் கோரிக்கை குறித்து ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எஸ்.பி.திஸநாயக்கவுடனும் திருமதி தமரா திஸநாயக்கவுடனும் மிலிந்த மொறகொடவுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்திய பின்னர் மிலிந்த மொறகொடவை ஜனாதிபதியுடன் பேசுமாறு கூறியுள்ளார்.

எஸ்.பி.திஸநாயக்க இதுவரை தனது தண்டனைக் காலத்தில் 5 மாத காலத்தை சிறையில் கழித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-4)

# நூல் வெளியீடு

(புங்குடுதீவு)

ஈழத்து இராமேஸ்வரம் என வழங்கப்படும் புங்குடுதீவு ஊரதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தான புதிய சித்திரத்தேர் நூல் வெளியீட்டுவிழா இன்று பிற்பகல் 2.00 மணிக்கு திருப்பணிச்சபை தலைவர் டாக்டர் ஆ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம அதிதியாக பேராசிரியர் எஸ்.பாலகிருஸ்ணன் கலந்து கொள்வார். (7-126)

# 20 ஆயிரம் பாவனையாளர்களுக்கு மின் இணைப்பை வழங்கமுடியாதுள்ளது

## ரஞ்சித் பொன்சேகா தெரிவிப்ப

(கொழும்பு)

மின் விநியோகத்திற்கான பொருட்ளின் பற்றாக்குறை காரணமாக ஏற்கனவே பணத்தை செலுத்திய சுமார் 20 ஆயிரம் பாவனையாளருக்கு மின்சார விநியோகததை வழங்கமுடியாதுள்ளதாக இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை மின்சார சபையின் பொதுமுகாமையாளர் ரஞ்சித் பொன்சேகா தகவல் தெரிவிக்கும்போது,

சுனாமிக் கடற்பேரழிவால் பாதிப்படைந்த பிரதேசங்களில் கையிருப்பிலிருந்த மின்சாரக் கம்பங்கள் மற்றும் வயர்கள் போன்றவை பாதிக்கப்பட்டதனாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இயற்கை அனர்த்தம் காரணமாகப் பாதிப்படைந்த பிரதேசங்களில் எமது கைவசம் இருந்த சகல பொருட்களையும் பவனைக்கு உட்படுத்தியுள்ளோம். எமது நட்பு நாடுகள் எமக்கு அவசியமான பொருட்களை வழங்க முன்வந்துள்ள பொழுதிலும் அந்தப்பொருட்கள் இதுவரை வந்தடைய வில்லை. இலங்கை மின்சாரசபை மாதாந்தம் 15 ஆயிரம் புதிய பாவனையாளருக்கு மின்சார இணைப்புக்களை வழங்கிவருகிறது. எதிர்வரும் ஜூன்மாத இறுதியளவில் இப்பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்குமென எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (க-7,4)

# தரம் குறைந்த நிவாரணப் பொருட்களே சுனாமி நிவாரணமாகக் கிடைக்கின்றன?

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்கள் தரம் குறைந்தவையாக இருப்பதாக தமக்குப் பெருமளவு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக சமூக சேவை பிரதியமைச்சர் எஸ.எஸ. சந்திரசேன தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட அகதிமுகாம்களைப் பார்வையிட்ட பின்னர் சகல முறைப்பாடுகள் தொடர்பாகவும் விசாரணை மேற்கொள்ளப்படும என்றும் அவர் தெரிவித்தார்.

அதே சமயம் சில கூட்டுறவுச் சங்கங்கள் உணவுப் பொருட்களையும ஏனைய நிவாரணப் பொருட்களையும், உரிய முறையில் நேர காலத்தில் வழங்குவதில்லை எனவும் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

புதுவருட பண்டிகைக் காலத்தில் வழங்கவென அனுப்பிவைக்கபட்ட இப் பொருட்களை கிராம சேவை அதிகாரிகள் உட்பட சில அரசாங்க அதிகாரிகள் உரியகாலத்தில் விநியோகிக்காது அரசாங்கத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளனர்.

எனவே கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள சகல பொருட்களும் இயன்றளவு விரைவில் இடம்பெயர்ந்த மக்களுக்கு விநியோகிக்கப்படுமென்று அவர் மேலும் தெரிவித்தார். (க-7-9)

## இன்று ஒரு தகவல்

# சங்கீத சங்கடம்

எனக்கு மிகவும் வேண்டப்பட்ட ஒருவர் என்னைத் தேடி திடீரென்று ஒருநாள் வந்தார். " என்ன விஷயம்?" என்று கேட்டேன்."நாதஸ்வரம் வாசிப்பதற்குக் கற்றுக்கொள்ளலாமா? என்று யோசிக்கிறேன் என்றார். நான் மிகவும் பயந்துபோய்விட்டேன். ஏனென்றால அவரது சாமார்த்தியம் என்னவென்பது எனக்கு நன்றாகத் தெரியும்! அவரை அருகே உட்காரவைத்து அறிவுரை கூற ஆரம்பித்தேன்.

இதோ பாருங்கள்! உங்களுக்கு எதற்கு இந்த விபரீத ஆசை சங்கதம் என்பது ஒரு சுகமான அனுபவம். நாமெல்லாம் சங்கீதம கற்றுக்கொள்ள ஆசைப்பட்டு நாமும் சிரமப்பட்டு சங்கீததையும் சிரமப்படுத்த வேண்டாம் என்றேன். அவர் அதையெல்லாம் காதில் வாங்குவது போல் தெரியவில்லை. எப்படியும் நாதஸ்வரம் வாசிக்கக் கற்கவேண்டும் என்பது போல் பேசினார். சரி... வேறு வகையில் முயற்சிசெய்து பார்க்கலாம் என்று யோசித்து அவரிடம் ஒரு கதையைக் கூறினேன்.

ஒரு ஊரில் ஒரு கோயில் இருந்தது. அங்கு ஒரு ஸ்தல விருட்சமும் இருந்தது. அந்த மரத்தில் ஒரு பிரம்ம ராட்சஷன் இருந்தான். ஒரு காலத்தில் நிறைய பாவங்கள் செய்து சாபம் வாங்கி பிரம்மராட்சஷனாக மாறியவன்.அவன் சாபவிமோசனத்திற்காக அந்த மரத்தில் காத்துக் கொண்டிருந்தான். நல்ல புத்தி ஞானமுள்ள ஆள் தான் ஏதோ போதாத காலம் பாவம் செய்துவிட்டு இப்படி ஆகிவிட்டான்.

பிரம்ம ராட்சஷன்ான அவனைக் கண்ணால் பார்க்க முடியாது. அவனுக்கு உருவம் கிடையாது. அந்தக் கோயிலில் உள்ள ஸ்தல விருட்சத்தில் அவன் இருந்துகொண்டிருக்கிறான். ஒரு பேய் மாதிரி அந்தக் கோயிலில் தினமும் நாதஸ்வரம் வாசிப்பார் ஒருவா. வாசிக்கிறார் என்று கூடச் சொல்ல முடியாது ஊதுவார் அவ்வளவுதான். முறையான பயிற்சி இல்லாதவர் அவர்.

அவர் தினமும் காலையும் மாலையும் வாசிப்பார் பிரசாதம் கொடுப்பார்கள் வாங்கிச் சாப்பிடுவார். மறுபடியும் வாசிப்பார் இப்படியே அவர் காலம் ஓடிக்கொண்டிருந்தது. ஒருநாள் அந்தக் கோயிலில் நீண்டநேரம் அவர் வாசித்துவிட்டு இரவு வீட்டுக்குப் புறப்பட்டார். அப்போது அந்த மரத்தில் இருந்த பிரம்மராட்சஷன் அதாவது பேய் அவரிடம் பரிதாபமாகப் பேச ஆரம்பித்தது.

"இதோ பாரப்பா... என்னை நீ கண்ணால் பார்க்க முடியாது. இருநதாலும் உனது வாசிப்பை வேறுவழியில்லாமல் தினமும் நான் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். எனக்கு ஒரு ஒத்தாசை செய்வாயா?"என்று கேட்டது. "என்ன செய்யவேண்டும?" என்று கேட்டார் இவர். "இனிமேல் நீ வாசிப்பதை விட்டுவிடவேண்டும்!" என்றது பேய். "ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டார் இவர் பரிதாபமாக.

நான் ஏற்கனவே ஒரு பாவம் செய்துவிட்டு பிரம்மராட்சஷனாக மாறி சாபவிமோசனத்திற்காக காத்துக்கொண்டிருந்தாலும சங்கீத ஞானம் உள்ளவன் தான். நீ வாசிப்பது கொஞ்சம் கூட நன்றாக இல்லை. அபஸ்வரமாக இருக்கிறது. என்னால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை. இதேமாதிரி நீ தினமும் வாசித்து அதை நான் கேட்டுக்கொண்டு வந்தால் சாபவிமோசனம் கிடைப்பதகுள் இங்கேயே நான் செத்துப் போனாலும் போய்விடுவேன். இப்போதே தினமும் உன் வாசிப்பைக் கேட்டு துரும்பாக இளைத்துப் போய்விட்டேன் என்றது.

"நீ சொல்வதெல்லாம் சரிதான் ஒத்துக்கொள்கிறேன். நான் வாசிப்பதை என்னாலேயே கூட சகித்துக் கொள்ளமுடியவில்லை. இருந்தாலும் இதை விட்டால் எனக்கு வேறு எந்தத் தொழிலும் தெரியாது. சாப்பாட்டுக்கே நான் இதைத்தான் நம்பியிருக்கிறேன். இதை விடுவிட்டு நான் என்ன செய்வது?" என்றார் அவர். "உனக்கு சாப்பாட்டுக்கு ஏதாவது வழி செய்தால் இந்த வாசிப்பைவிட்டு விடுவாயா?" என்று கேட்டது அது. "விட்டுவிடுவேன்" என்றார் இவர்.

"அப்படியென்றால் நான் சொல்வதைக் கேள்! இந்த ஊர் ராஜாவின் மகளை நான் பிடித்துக் கொள்கிறேன்! தன் மகளுக்கு பேய பிடித்திருக்கிறது என்று தெரிந்தவுடன் அந்த ராஜா ஊரில் உள்ள மந்திரவாதியையெல்லாம் கூடட்பிட்டுப் போவார். நான் யாருக்கும் அசைந்து கொடுக்காமல் இருப்பேன். சில நாள் கழித்து நீ அந்த அரண்மனைக்கு வா. நான் அரசகுமாரிக்குப் பிடித்திருக்கும் பைத்தியத்தை சரி செய்து விடுகிறேன் என்று சவால் விடு அதன்பின் நாதஸ்வரத்தை வாசி நான் விட்டுவிட்டு வருகிறேன்" என்று யோசனை கூறியது.

இவரும் யோசித்துப் பார்த்துவிட்டு சரியென்று ஒத்துக் கொண்டார். இந்தத் திட்டப்படியே எல்லாம் நடந்தது. ராஜா நிறையப் பரிசுகொடுத்தார். இவரும் நாதஸ்வரம் வாசிப்பதை விட்டுவிட்டார்.

இந்தக் கதையை எதிரில் உட்கார்ந்திருந்த நண்பரிடம் சொன்னேன். அப்படியும் அவர் நாதஸ்வரம் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆசையை கைவிட்டதாகத் தெரியவில்லை. சரி... இவரை எப்படி சரி செய்வதென்று யோசித்துப் பார்த்தேன் கடைசியாக ஒரு விஷயத்தைச் சொன்னேன்.அதைக் கேட்ட பின்புதான் "சரி அப்படியென்றால் நான் நாதஸ்வரம் கற்றுக் கொள்ளும் யோசனையைக் கைவிடுகிறேன் என்று ஒத்துக் கொண்டார்.

நான் என்ன சொன்னேன் தெரியுமா? "நீங்கள் நாதஸ்வரம் வாசிக்கக் கற்றுக்கொள்வதென்று முடிவு செய்தால் உங்களுடன் வாசிப்பதற்கு உதவியாக நான் தவில் வாசிக்கக் கற்றுக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்" என்றேன் அவ்வளவு தான். ஆள் அம்பேல்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அரசின் புறக்கணிப்பு தொடருமாயின் வீதியில் இறங்கிப் போராடுவோம்

## —ரணில் விக்கிரமசிங்க—



(மத்தறை)

சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணக் கொடுப்பனவினைத் தொடர்ந்து வழங்க அரசாங்கம் தவறும் பட்சத்தில் தாம் மக்களுடன் இணைந்து வீதி மறியல் போராட்டத்திலும் உண்ணா விரதப் போராட்டத்திலும் ஈடுபடப் போவதாக எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடநத வெள்ளிக்கிழமை மாத்தறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுனாமி நிவாரணக் கொடுப்பனவாக 5ஆயிரம் ரூபா கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது அரசாங்கம் அதனை நிறுத்தியிருக்கின்றது.

ஆனாலும் மக்களுக்குத் தேவையான கொடுப்பனவைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கத்துக்கு கடப்பாடு இருக்கின்றது இருந்தும் அரசு அதனைத் தவிர்த்து வருகிறது என அவர் சுட்டிக் காட்டினார்.

மேலும் வெளிநாடுகளில இருந்து பெருமளவான நிதிகள் குவிந்த வண்ணமுள்ள நிலையில் அரசின் இவ்வாறான நடவடிக்கை கண்டிக்கத்தக்கதாகும். அந்த நிதியினை அரசு வைத்துக்கொண்டு சொகுசான ஆட்சியினை பணத்தால் நடாத்தலாம் என நினைக்கிறது.

எவ்வாறாயினும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி மற்றும் நீண்டகால அடிப்படையிலான நிவாரணங்களை வழங்குவதற்கு பல உதவிகள் கிடைத்திருககின்றன.

இருந்தும் அரசுக்கு இதனை நடைமுறைப்படுத்த எந்தவிதத் திட்டமும் இல்லை. இந்த நிலை தொடருமாயின மக்களோடு இணைந்து போராட வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ற-4)

# ஊடகவியலாளர் சிவராமின் படுகொலை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது

## வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகம் அறிக்கை

(கிளிநொச்சி)

பிரசித்தி பெற்ற ஊடகவியலாளர் டி.சிவராமின் படுகொலை அதிர்ச்சி தருகிறது என கிளிநொச்சியில் உள்ள வட-கிழக்கு மனித உரிமைகள் செயலகம் தெரிவித்துள்ளது. பிரபல ஊடகவியலாளர் சிவராமின் படுகொலை தொடர்பாக நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தொிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 29ஆம் திகதி கொழும்பு நகரில் கடத்திக் கொலை செய்யப்பட்ட பிரசித்தி பெற்ற ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராமின் கொலையானது ஏற்கனவே பலவீனமடைந்து வரும் பத்திாிகைச் சுதந்திரத்திற்கு மேலும் விழுந்த ஓர் அடியாகும.

இது இறந்துகொண்டிருக்கும் இலங்கை ஜனநாயகத்தின் பிரேதப்பெட்டியில் அடிக்கப்பட்ட மற்றோர் ஆணி எனலாம். கொழும்பில் உள்ள ஓர் பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் வைத்துக் கடத்தப்பட்ட அவரின் உடல் பாராளுமன்றக் கட்டடத் தொகுதிக்குப் பின்புறமாக 500 மீற்றர் தூரத்தில் கண்டெடுக்கப்பட்டமை இதற்கு அடையாளமாகக் கூறப்படுகின்றது.

ஆயுதம் தாங்கியோரால் இலங்கை அரசின் ஆட்சிபீடத்திற்கு அண்மையாக கொலை செய்யப்பட்ட சிவராம் ஏற்கனவே கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளரின் நீளமான பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த 20 வருடங்களாக இரகசியமாகக் கொலை செய்யப்படும் ஊடகவியலாளர் பற்றியும் வடக்கு-கிழக்கு மனித உாிமைகள் செயலகம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது.

இது இலங்கை அரசுக்கும் அதன் பொலிஸ் துறைக்கும் ஓர் அவமானமானதாகும். இலங்கையின் நிலவரம் பற்றி ஆவலுடன் வாசித்தறியும் உள்ளூர் சர்வதேச வாசகர்களுக்கு சிவராம் எழுதும் அரசியல் களநிலவர ஆய்வறிக்கைகள் ஆர்வம் ஊட்டுவனவாக அமைந்தன. இவ்வகையான அறிக்கைகளுக்கு அவாின் மறைவு பெரிய இடைவெளியாகும்.

கடந்த காலங்களில் சிவராம் தனது யதார்த்த பூர்வமான அறிக்கைகளின் சார்பில் பல அச்சுறுத்தல்களை பெற்றிருக்கின்றார். கடந்த வருடத்தில் இருமுறை இலங்கைப் பொலிஸார் அவரது வீட்டை ஆயுத வேட்டையின் சார்பாகத் தேடியுள்ளனர்.

உண்மையில் இத்தகைய தேடுதல்கள் அவரது ஆய்வுகளை நிறுத்துவதற்கு கொடுக்கப்பட்ட எச்சரிக்கைகளாகும். அதே நேரத்தில் பத்திரிகை நிருபர்கள் சிவராமின் பாதுகாப்பற்ற நிலையைப்பற்றி தங்கள் ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளனர்.

2001 ஆம் ஆண்டு சிவராமும் அவரை ஒத்த பத்திாிகை நிருபரும் மட்டக்களப்பில் இருக்கும் ஓர் கழகத்தில் வைத்துத் தாக்கப்பட்டனர். இதனால் சிவராம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இத் தாக்குதலுக்கு பாதுகாப்புப்படையே காரணம் எனச் சந்தேகிக்கப்பட்டது.

2000 ஆம் ஆண்டில் மிகவும் பிரசித்தி பெற்ற பி.பி.சி நிருபர் மயில்வாகனம் நிமலராஜனும் மட்டக்களப்பில் 2004 இல் கொல்லப்பட்ட நடேசனும் அரச பாதுகாப்பு படையால் கொல்லப்பட்டனர் என சந்தேகிககப்பட்டது.

சிவராமின் படுகொலை சம்மந்தமாகத் துயருறும எல்லா மனித உரிமைகள் அமைப்புக்களுடனும் வட கிழக்கு மனித உரிமைகள் செயலகமும் இணைந்து விலை மதிப்பற்ற பத்திரிகைச் சுதந்திரத்திற்காக குரல் கொடுக்கின்றது என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-4)

## பொல்காவெல விபத்து குறித்த விசாரணைகளை விரைவில் நடத்தி முடிக்க வேண்டும்

(கொழும்பு)

பொல்காவெல யல்சல மோதர என்ற இடத்தில் இடம்பெற்ற விபத்து சம்பந்தமான நீதிமன்ற விசாரணைகளை மூன்றுவார காலத்திற்குள் நடத்தி முடிக்குமாறு தாம் ஜனாதிபதியை கேட்டிருப்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் கெட்டப்பொல அமரகீர்த்தி தேரர் தெரிவித்தார்.

பேருந்து ஓட்டுநர்களினதும் நடத்துநர்களினதும் முறையறற செயல்களை தொடர்ந்தும் பார்த்திருக்க முடியாது என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, முறையற்ற விதத்தில் இலாபமீட்டும் தனியார் பேருந்து சங்கங்களினால் கஷ்டப்படும் அப்பாவி மக்களின் உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்த யாரும் இல்லையென மக்கள் விடுதலை முன்னணி கவலை தெரிவிக்கின்றது.

இதுகுறித்து மக்கள் விடுதலை முன்னணியின் தலைவா சோமவன்ஸ அமரசிங்க கருத்துத் தெரிவிக்கையில், பொதுப் போக்குவரத்து இலாபமீட்டும் தொழில்துறையாக மாறியுள்ளது என்றார். (க-9)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழும் முல்லை மக்களுக்கு வீடுகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் பல வடமைப்புத் திட்டங்கள் உலக வங்கியின்உதவியுடன் நிறைவேற்றப்படவுள்ளது.

இதற்கான சகல நடவடிக்கைகளும் மாந்தை கிழக்குப பிரதேச செயலாளர் ம.ஜெகூவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2004 ஆம் ஆண்டு மாந்தை கிழக்குப் பிரதேசத்தின பாண்டியன் குளம் கிராம சேவையாளர் பிரிவிலேயே முதன் முறையாக பாட்சார்த்த திட்டமாக உலக வங்கியின் நிகாப் திட்டத்தின் மூலம் ஒவ்வொன்றும் ஒன்றரை இலட்சம ரூபா செலவில் 25 வீட்டுத் திட்டங்கள் நிர்மாணிககப்பட்டு வேலைகள் அனைத்தும் பூர்த்தியாககப்பட்டு உரியவர்களிடம் விரைவில் கையளிக்கப்படவுள்ளது.

இதற்குப் புறம்பாக இதே பிரதேச செயலாளர் பிரிவில் கரும்புளியான் கிராமசேவையாளர் பகுதியில் 2002 ஆம் ஆண்டு நிக்கொட் திட்டத்தின் மூலம் 36 வீடுகளும் பூவரசங்குளம் கிராம சேவையாளர் பகுதியில் 14 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இப்பிரதேசத்தில் சிராட்டிகுளம், பாலைப்பாணி, கரும்புளியான் ஆகிய மூன்று கிராமங்களும் 2005 ஆம் ஆண்டு உலக வங்கியின் நிகாப் திட்டத்தின் மூலம் 100 வீடுகள் அமைக்க உலகவங்கி அனுமதி வழஙகியுள்ளதால் குறிப்பிட்ட கிராமங்களில் இருந்து தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

45 வருடங்களுக்கு மேலாக அடிப்படை வசதிகள் எதுவுமின்றி மிகச் சிறிய ஓலைக்குடிசைகளில் வாழநது வருகின்ற ஏழை மக்களுக்கு இவ் வீடமைப்புத் திட்டத்தின் மூலம் ஒவ்வொருவருக்கும் 2 இலட்சம் ரூபா பெறுமதியான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படுமென்று பிரதேச செயலாளர் தெரிவித்தார். (து-128)

# சிறுவர் அரங்கம்

## பயனுள்ள தகவல்கள்


1.உலகின் மிகப்பெரிய இரா்ணுவம் - சீன இராணுவம்.
2.பரப்பளவில் மிகப்பெரிய நாடு - ரஷியா.
3.மக்கள் தொகையில் மிகப்பெரிய நாடு - சீனா.
4.கோட்டைகள் அதிகமுள்ள நாடு - ஸ்பெயின்.
5.மிகவும் தட்டையான நாடு - மாலைதீவு.
6.டாக்டர்கள் அதிகம் உள்ள நாடு - சீனா.
7.வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்கள் அதிகமுள்ள நாடு - அமெரிக்கா.
8.உலகில் மிகச் சிறிய குடியரசு நாடு - நௌரு.
9.பசிபிக்கடலின் அகலம் - 16,880கிலோ மீற்றா்.
10.சீனப் பெருஞ்சுவரின் உயரம் - 2800கி.மீ, அகலம் 6மீ.
11.உலகின் மிகப்பெரிய தீவு - கிரீன்லாந்து. பரப்பு- 8,40,000 சதுர மைல்.
12.உலகின் மிகப் பெரிய கண்டம் -ஆசியா. பரப்பு- சுமார் 1,66,88,000சதுர மைல்.

*தி.திவ்வியா, வட்டு இந்துக் கல்லூரி.*

## சர்வதேசத் தேதிக்கோடு: 180°

நெடுங்கோடு சர்வதேச தேதிக்கோடு எனப்படும. இக்கோட்டில் மாத்திரம் கிழக்கிலும், மேற்கிலும் 'ஒரு நாள்' வித்தியாசப் படுகின்றது. 180° நெடுங்கோட்டிற்கு மேற்குப் பக்கத்தில் நேரம், கிறீன்விச் நேரத்திலும் 12 மணி கூடுதலாக இருக்கும்; கிழக்குப் பக்கத்தில் 12 மணி குறைவாக இருக்கும். இக்கோட்டிற்கு கிழக்கே ஞாயிறாக இருந்தால் மேற்கே திங்களாக இருக்கும். இத்தேதிக்கோடு நேர்கோடன்று; நிலப்பரப்புகளை அடுத்து கோணமாக முறிவுற்றுக் காணப்படும்.

## ஒட்டகச் சிவிங்கியின் கழுத்து நீளமாக இருப்பது ஏன்?



ஒட்டகச் சிவிங்கியின் கழுத்தில் 7 எலும்புகள் உள்ளன.

தூரத்தில் வரும் எதிரிகளை உடனடியாகக் கண்டு பிடித்து விடுவதற்கு வசதியாகவே இதன் கழுத்து நீளமாகவுள்ளது.

இவை நின்றுகொணடே தூங்கும். ஒரு நாளைக்கு 4 மணி நேரம்தான் தூங்கும். இதன் கர்ப்பகாலம் 425 நாட்கள். பத்து ஆண்டுகள் வரை உயிர் வாழும். நின்றபடியே குட்டி போடும்.

வரிக்குதிரைக் கூட்டமும், ஒட்டகச் சிவிங்கி கூட்டமும் எபபோதும் ஒன்றாகவே இருககும். ஒட்டகச் சிவிங்கி உடனடியாக எதிரிகளைக் கண்டு பிடித்து விடுவதால் இவையும் தப்பத்துவிடும். என்ன ஐடியா பாருங்கள்!

ஒட்டகச் சிவிங்கி மணிக்கு 32 மைல் வேகம் ஓடும. ஒட்டகமும், சிறுத்தையும் சேர்ந்தே ஒட்டகச் சிவிங்கி ஆயிற்று.

ஒரு சிறு ஒலியைக கூட அதனால் எழுப்ப முடியாது. பேசவும் முடியாது.

அதன் நாக்கின் நீளம் மட்டும் 11/2 அடி. கால்களின் உயரம் 6 முதல் 71/2 அடி அதன கால்களுக்குள் ஒரு சராசரி மனிதன் நுழைந்து தலை இடிக்காமல் போகலாம்.

ஒட்டகச்சிவிங்கி மாமிசம் புசிக்காது. கழுத்தை திருப்பாமலே தனக்குப் பின்னால் உள்ள பொருட்களை பார்க்கும் திறன்கொண்ட ஒரே உயிரினம் இதுதான்.

## நமது உடலில்....

நமது உடல் சுண்ணாம்புச்சத்து, உப்புச்சத்து, கந்தகம், கரி, தண்ணீர் ஆகிய பொருட்களால் ஆனது. வயது முதிர முதிர இந்தப் பொருட்களின் மதிப்பும குறைந்துகொண்டே வருகிறது.

பிறக்கும் போது நம் உடலில் 270 எலும்புகள் உள்ளன. இறக்கும் போது 206 எலும்புகள்தான் இருக்கும். காணாமல் போன அந்த 64 எலும்புகள் மற்ற எலும்புகளுடன் சேர்ந்து விடுகின்றன. நம் உடலில் உள்ள மின்சாரத்தைக் கொண்டு 25 வாட் மின்விளக்கை எரியவிடலாம். நம் உடலில் 207 வகையான தசைகள் உள்ளன. இவற்றில் தலையில் மட்டும் 83 தசைகள் உள்ளன.

## சிந்தனைக்கு...

அஞ்சாமையே எல்லா நற்குணங்களுக்கும் அதி நாயகன்.

வாழ்க்கை விசாலமானது. அதில் நாம் வலிமையோடு தங்குதடையின்றி முன்னேறிச் சென்றுகொண்டேயிருக்க வேண்டும்.

பணிவைக் கைவிடா திருப்போமானால் ஆபத்துக்கள் எதுவுமே நேராது!

*-வினோபா பாவே*

## ஈனரை அடுத்தால் மானங்கெடும்

அடர்ந்த பெரிய காட்டில் விலங்குகளின் தர்மராட்சியம் நடந்து வந்தது. தத்தமது இயல்பான நடத்தைகளுடன் இங்கிதமான வாழ்வை நடத்தி வந்தன விலங்குகள்.

பக்கத்துக் காட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட தெறியன் சிங்கமொன்று அங்கு வந்து சேர்ந்தது.

ஆனால் அது எதிர்பார்த்தது போன்று அங்கு இராணுவ பாணியிலான மரியாதை எதுவும அதற்கு தரப்படவில்லை. விலங்குகள், பறவைகள் தம் பாட்டில் அமைதியாக நடந்து கொண்டமையை ஒரு புறக்கணிப்பாக இன்ங்கண்டு கொண்டது தெறியன் சிங்கம்.

மகாராஜாவான சிங்கத்தைக் கண்டு முறைப்பாடு செய்ய யோசித்தது.

ஒருநாள் திடீரென அந்தச் சிங்கராஜாவை நேரில் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது. உடனே அதனிடம்,

"முட்டாள் ராஜாவுக்கு முதல வணக்கம்" என்றது. சிங்கராஜா இதனை எதிர்பார்த்திருக்கவில்லை.

"என்னைப பார்த்து முட்டாள் என்றா நினைக்கிறாய்? உன்னை என்ன செய்கிறேன் பார்" என்றதும்,

"அய்யோ, நான் அப்படி நினைக்கவில்லை. இங்கேயுள்ள மிருகங்கள்தான் அப்படி நினைககின்றன" என்று அண்டிவைத்தது அயல் காட்டுச் சிங்கம்.

தொடர்ந்து கூறியது,

"ராஜாவென்றால் எவ்வளவு பலம், செல்வாக்கு, அதிகாரம் இருக்கும். இங்கே உங்களை அழைத்து முறையாக மரியாதை செய்கின்றார்களா?



அரச பரம்பரையைச் சேர்ந்த எனக்கு சிறு மதிப்பாவது காட்டுகின்றார்களா? பார்த்தும் பார்க்காதது போல புறக்கணித்து நடந்துகொள்ளுகின்றார்கள். வணக்கம் சொல்வதுமில்லை தாழ்ந்து பணிவதுமில்லை".

சிங்கராசாவுக்கு அந்த அயல்காட்டுச் சிங்கத்தின் கணிப்பு சரிபோலவும் தெரிந்தது.

ஆனாலும் மீண்டும் அது தனது முன்னைய தார்மீக நிலைப்பாட்டிற்கு வந்ததுடன் புதிய சிங்கத்தின் பின்புலத்தை ஆராயுமாறு புலிப்படையிடம் கேட்டுக் கொண்டது.

இதேவேளை, அயல்காட்டு சிங்கத்தின் முறைப்பாடு பற்றி பரிசீலனை செய்வதாகவும் ஒப்புக்காக கூறி வைத்தது அந்த அரசன் சிங்கம்.

பதிலில் திருப்தியும், பெருமையுமடைந்த சிங்கம் ஒரு நாள் உல்லாசமாக பொழுதைக் கழித்துக்கொண்டிருந்த இரண்டு யானைகளின் அருகே சென்றது.

"ஒரு சிங்கத்தைக் கண்டவுடன் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று அதிகாரத் தொனியில் கேட்டது. பதிலுக்குக் காத்திராமல் உரக்கக் கர்சசித்தது.

யானைகளும் பதிலுக்கு காத்திருக்கவில்லை. அடுத்த நொடியே தமது துதிக்கைகளால் ஓங்கி சிங்கத்தை அடித்தன.

"பதில் தெரியாவிட்டால் தெரியாது என்று சொல்வது தானே. அதற்கு இப்படியும் அடிப்பதா?" என்று கூறியபடியே ஓட்டம் பிடிக்க முயன்ற அயல் காட்டு சிங்கத்தினால் அவ்வாறு செய்யமுடியவில்லை.

அந்த இடத்திலேயே வீழ்ந்து இறந்தது. சம்பிரதாயத்திற்காக கிடைக்கும் மரியாதையை அதிகாரம் என்று நினைத்தால் ஆகாது.

## காலைப் பாடம்

குயில்கள் பாடம் படிக்கின்றன
கூ கூ என்று பாடி
மயில்கள் பாடம் படிக்கின்றன
மா வோ என்றே ஆடி!

கா காப் பாடம் படிக்கிறது
கரைந்து செல்லுங் காக்கை
கீ கீப் பாடம் படிக்கிறது
கீற்றில் குந்துங் கிளியும்!

கீச்சுப் பாடம் படிக்கிறது
கிளையில் உள்ள குருவி
மூச்சில் பாடம் படிக்கிறது
முரலிச் செல்லும் வண்டு!


அம்மா வணக்கம் பயிலுகின்றாள்
அறையில் தொழுது நின்று
சும்மா தம்பி தூங்க லாமோ?
சோம்பல் நீக்கி எழுவாய்!

எழுக எழுக என்று பாடும்
எங்கும் கோவில் மணிகள்
தொழுக தொழுக விரைந்து பாடம்
தொடங்க வேண்டும் தம்பி!

*ச.வே.பஞ்சாட்சரம்.*

## இணையுங்கள்

அன்புக் குழந்தைகளே! கீழே பல இலைகள் உள்ளன. அவற்றில் ஒரே மாதிரியான இலைகளை இணைத்து மகிழுங்கள்.






# ஈழத்து இராமேஸ்வரம்

# பாணாவிடைச் சிவன் கோயில்

## (தான்தோன்றீஸ்வரம்)



# சித்திரத் தேர் மலர்–02.05.2005



அழகுறு ஊரதீவு பாணவிடைப் பதியில் தான் விரும்பி வந்து இருந்து அருள்சொரியும் தான்தோன்றி ஈஸ்வரரான இராமலிங்கேஸ்வர ஆலயம் இடம் பெயர்ச் சியின்பின் சீரற்று இருந்தது. இங்கிருந்துவெளிநாடுகளில் வாழும் எம்மவர்களின் உதவி யுடனும் இங்குவாழும் மக்களின் முயற்சியாலும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு புதிய கோயிலாகி கும்பாபிஷேகம் 2002 ஆம் ஆண்டு நடைபெற்றது.

இன்று சுவிஸ் வாழ் எமதூர் மக்களால் ஆரம்பிக்கப்பட்ட சித்திரத்தேர் திருப்பணி பலரின் உதவியினாலும் ஆண்டவள் அருளினாலும் இன்று நிறைவுற்று எம்பெருமான் அழகுறு 33அடி உயரமான சித்திரத்தேரில் இன்று பவனி வந்து அடியார்களுக்கு அருள் செய்கிறார். இந் நாளில் எல்லோர்க்கும் அவன் அருள் கிடைக்க இராமலிங்கேஸ்வரர் பாதமலர் பணிகிறோம்..

இமைப்பொழுதும் என்ற நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க.

சித்திரத்ரேறி எம் அப்பன் திருவீதியுலா வருவதை பார்த்து மகிழ்ந்திடுவோம், பரவசம்கொண்டிடுவோம்.

ந.இராசதுரை அதிபர்

தேர்த்திருப்பணிச் சபை

## சித்திரத்தேரேறி திருவீதியுலா

ஈழத்து இராமேஸ்வரம் எனப்போற்றப்படும் புங்குடுதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தானத்தில் புதிய சித்திரத்தேரிலே இறைவன் சோமஸ்கந்த மூர்த்தமாக திருவீதி வலம் வரும் இன்றைய நாள் எம் வாழ்வில் ஒரு பொன்னாளாகும்.

தீவகத்தில் சைவப்பண்பாடு சிறந்து விளங்கும் புங்குடுதீவின்

## ஆசிச் செய்தி

ஈழத்து இராமேஸ்வரம்- புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் தேவஸ்தானத்தில் எம்பெருமான் சோமஸ்கந்த மூர்த்தமாக புதிய சித்திரத்தேரில் பவனிவரும் இன்றைய நன்னாளில் அவன் தாள்பணிந்து பக்திசெய்யும் அடியார்கள் தம் வாழ்வில் சாந்தியும் சமாதானமும் செல்வச் செழிப்பும் தேகாரோக்கியமும் நிறைந்து அவர்கள் பெருவாழ்வு வாழ எம்பெருமான் நல்லருள் புரிய வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

இரத உற்சவம் அழித்தல் தொழிலைக் குறிப்பதாகும். கொலை ,பாதகச் செயல்கள் வன்முறைகள்யாவும் அழித்தொழிக்கப்படவேண்டும். இன்றைய புதிய சித்திரத்தேர்உற்சவநாளில் தஞ்சமென தன்னை வந்து வழிபடும் அடியார்கள் எல்லா நலனும் பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ எம்பெருமாள் அருள் பாலிக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

ஆலயபிரதம உற்சவ குரு பரமசாமி குருக்கள்

கோப்பாய்.

சகல விதமான பலசரக்கு பொருட்களையும் சில்லறையாகவும் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

நவரெட்ணம் பிரதர்ஸ்

5ஆஸ்பத்திரிவீதி.
மாவத்தகம
உரிமையாளர்:-
ந. சாந்தகுமார்,புங்குடுதீவு-7

யாழ் மாவட்டம், வன்னி பெருநிலப்பரப்பு உட்பட சகல பகுதிகளிலும் 40 வருடங்களுக்கு மேலாக ஒளி,ஒலி அமைப்பில் புகழ் பெற்ற ஸ்ரீ மனோன்மணி அமைப்பாளர்கள் மீண்டும் தீவகத்தில் தமது சேவையினை மேற்கொண்டு வருகின்றார்கள். அன்பர்கள், வாடிக்கையாளர் அனைவருக்கும் அறியத்தருகின்றனர்.

நிரந்தர முகவரி:-
மு. கந்தஞானி, தம்பாட்டி
ஊர்காவற்றுறை.

த. முகவரி:-மு. கந்தஞானி
லோட்டஸ்வீதி,
17/2ஆறுகால்மடம், யாழப்பாணம்.

சகல விதமான பல சரக்கு பொருட்களையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

சரஸ்வதி ஸ்ரோஸ்

பிரதான வீதி,
7ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

உரிமையாளர்:-
ஜ.ருபன்
புங்குடுதீவு-07.

சகல விதமான இரும்பு பொருட்களையும் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாடவேண்டிய இடம்

இராசலெட்சுமி காட்வெயார்

உரிமையாளர்:- இ.குகநாதன்
புங்குடுதீவு-07

80/01 சின்னக்கடை,
யாழ்ப்பாணம்

பலவகையான சில்லறைப் பொருட்களையும் தரமான முறையில் பெற்றுக்கொள்ளவதற்கு 50 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி வரும் ஒரே நிறுவனம்

நவமணி ஸ்ரோஸ்

(உரிமையாளர்: த.நவரெட்ணம்)

7ஆம் வட்டாரம்,
பிரதான வீதி,
ஊரதீவு சந்தி புங்குடுதீவு

பா.நல்லையா

கந்தர் மடம்,
யாழ்ப்பாணம்.

தமிழன்
තමිළන්
Thamilan

பாரம்பரிய தமிழர் உணவகம்
සාම්ප්‍රදායික ද්‍රවිඩ අවන්හල
AUTHENTIC THAMILAR CUISINE

காலை – மதிய – இரவு உணவுகள்
அறைகள்
வைபவங்கள்/கூட்டங்களுக்கு பொதுக்கூடம்
AC,TV, தொலைபேசி, சுடுநீர் வசதியுடன்
உல்லாசப்பிரயாணிகள் சபையின் அங்கீகாரம்பெற்ற

YARL PAADY RESIDENCY

51c, AMMAN ROAD, NALLUR, JAFFNA.

021 222 6868 / 0777 276636

BOOKINGS : 372, GALLE ROAD, COL-03.
0777 360353, 4736086/87

புங்குடுதீவில் லான்மாஸ்ரர் வாடகைக்கு பெற்றுக்கொள்ள நீங்கள்நாட வேண்டியஇடம்

செ.ஈசன்

புளியங்கூடல் வடக்கு,
புளியங்கூடல்.

சுகன்யா நகை அகம்



உரிமையாளர்
ந.மதியழகன்
(எழுவைதீவு)

தங்கப்பவுண் நகைவியாபாரம்

177/3 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-077 6257886

177/3, Kasthuriar Road,
Jaffna

நிலமகள் ரெயிலரிங் அண்ட் போட்டோ
அண்ட் வீடியோ

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல் - குறள்

வலம்புரி

# ஆட்சிமாற்றமே தீர்வுக்கு வழி

அரசியல் பொறிக்குள் அகப்பட்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க எதனையுமே நகர்த்தமுடியாத நிலையில் அவரின் இயலாமைத்தனம் மெல்லமெல்ல வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அரசகட்டிலில் ஏறி ஆட்சிக் குதிரையை ஓட்ட வேண்டுமென்ற ஒரே இலக்குடன் ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியைக் கலைத்து இனவாதக் கட்சியான ஜே.வி.பியை அரவணைத்து அரசாங்கத்தை அமைத்தவர் ஜனாதிபதி சந்திரிகா.

அள்ளிஅரவணைத்தது இன்று முள்ளாக மடியில் குத்தத் தொடங்கிவிட்டது. அந்த வலியின் வேதனையில் இப்போது எதனையுமே ஆற்றமுடியாத இயலாமையுடன் ஜனாதிபதிக்கு உண்மைகள் வார்த்தைகளாகி வெளிவரத் தொடங்கிவிட்டன.

பிலியந்தலையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் ஜனாதிபதி உரையாற்றுகையில்- தனது மனவேதனையையும், ஆற்றமுடியாத ஆதங்கத்தையும் கொட்டித் தீர்த்திருக்கிறார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்திற்குப் பின்னர் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை புனரமைப்புச் செய்வதற்காகவே தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுக்கட்டமைப்பினைக் கோரினர். விடுதலைப் புலிகளின் இக் [illegible]ரிக்கை சாதாரணமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய கோரிக்கையே.

இதனைக்கூட வழங்கமுடியாவிட்டால் அரசாங்கம் சமாதானம் பற்றியே பேசமுடியாது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையினை அரசாங்கம் எதிர்த்தபோதிலும், வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக யோசனைக்கு அரசாங்கம் இணங்கமுடியும்.

இக்கோரிக்கைகளுக்கு கூட்டமைப்பு அரசில் அங்கம்வகிக்கும் கட்சிகள் இணக்கம் தெரிவித்த போதிலும் ஜே.வி.பி மாத்திரம் எதிர்ப்பைக் கிளப்பியிருக்கிறது. ஜே.வி.பியின் கடும்போக்கினால் என்னால் சமாதானம், பேச்சுவார்த்தை என்ற ஏணிப் படிகளில் ஏறமுடியாதுள்ளது.

ஜே.வி.பியுடன் கூட்டுச்சேராமல் ஆட்சியை அமைத்திருந்தால் இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் வழங்கி நாட்டை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் சென்றிருப்பேன் என்று ஜனாதிப[illegible] சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தனது இயலாமைத்தனத்தை பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார்.

ஜே.வி.பியின் கூட்டுக்குள் அகப்பட்டிருக்கும் ஜனாதிபதி எந்தப் பக்கமும் அசையமுடியாமல் அடங்கிப்போயிருப்பதன் விளைவே இதுவாகும். வீறாப்புக்காக அவ்வப்போது வாயைத் திறந்தாலும் ஜே.வி.பியை எதிர்த்தால் ஆட்சிபோய்விடும் என்ற நடுக்கம் ஜனாதிபதிக்கு உள்ளூர இருந்து கொண்டே இருக்கிறது.

இதனால் ஜனாதிபதியினால் பொதுக்கட்டமைப்புக் குறித்தோ, இடைக்கால நிர்வாகசபை குறித்தோ, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்தோ ஒரு உருப்படியான முடிவுக்கு அறவே வரமுடியாது. இவரால் தீர்வு உருவாகுமென எதிர்பார்ப்பது இலவுகாத்தகிளிபோல ஏமாற்றத்தையே அளிக்கும்.

ஆட்சிபீடத்தில் அமரவேண்டும் என்பதற்காக கணவனை அழித்தவர்கள் என்று தெரிந்தும் அவர்களோடு கூட்டணி சேர்ந்தார் என்றால் அவரின் அரசியல்மோகம் எத்தகையது என்பது புலப்படும்.

இதனால் அவர் நாட்டைப் பற்றியும், மக்களைப் பற்றியும் ஒருபோதும் சிந்திக்கவில்லை என்பதும் வெளிப்படுகிறது.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிகாவின் அரசு இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆக்கபூர்வமான கைங்கரியங்களை ஒருபோதும் முன்னெடுக்காது என்பதற்கு இதுவரைகால இழுத்தடிப்பும், அரசியல் அநாகரிகமும் சான்றாக அமையும்.

எனவே நாட்டையும், மக்களையும் பீடித்திருக்கின்ற தோசம்நீங்க அரசியலில் மாற்றம் ஒன்று ஏற்படவேண்டும். தனது இயலாமையை உணர்ந்து கொண்டதுபோல ஜனாதிபதி இதனையும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

எதனையும் சாதிக்காமல், சாதிப்பவர்களையும் தடுத்துக்கொண்டு ஆட்சிக்கு அர்த்தமில்லாமல் இருப்பதைவிட புதிய ஆட்சிமாற்றம் ஒன்றுக்கு ஜனாதிபதி முனையவேண்டும்.

## சிவராமின் இறுதிக் கிரியையின் போது

# இலங்கை அரசு தனது அரசியல் சித்து விளையாட்டை காட்டாமல் இருக்குமா?

(கொழும்பு)

இலங்கை இராணுவ புலனாய்வுப்பிரிவால் சிங்களப் பத்திரிகையாளர்களின் உதவியுடன் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யபட்ட படைத்துறை ஆய்வாளர் சிவராமின் உடலை அடக்கம் செய்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது .

இந்த விடயம் தொடர்பாகத் தெரியவருகையில்,சிவராம் தனக்கு இருந்த கொலை அச்சுறுத்தலைப் பலதடவை தனது ஊடக நண்பர்களுக்குக் கூறியிருந்தார். அவ்வாறு நான் கொலை செய்யப்பட்டால் என்னை எனது பிரதேசத்தில் முறைப்படி அடக்கம் செய்துவிடவும் எனப் பலதடவை கூறியிருந்தார்.

இதற்கும் அப்பால் தனது பல கட்டுரைகளில் எல்லாம் தனது நித்திய உறக்கத்துக்குரிய இடம் மட்டக்களப்பின் ஆலையடிச்சோலை என்று பல தடவை சுட்டிக்காட்டியிருந்ததுடன், எங்குதான் நான் கொல்லப்பட்டாலும் எனது உடலை மீட்டு வந்து குறித்த இடத்தில் அடக்கம் செய்தால் அதுவே எனது நண்பர்களின் இறுதி நன்றிக்கடன் என்றும் பலதடவை எழுதியிருந்தார். தற்போது இவருடைய இறுதி ஆசை நிறைவேறுமா? என்ற சிக்கல் உருவாகியுள்ளது.

இலஙகை அரசாங்கத்தால் அரச உயர் இராணுவ அதிகாரியின் சொகுசு வாகனத்தில் இலங்கை இராணுவ உளவாளிகளினால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட சிவராம் நித்திய உறக்கத்திற்குத் தெரிவு செய்த இடம் தற்போது மட்டக்களப்பு விமானப்படைத்தளம் என்று கூறி விஸ்தரிப்புச் செய்யப்பட்டு உயர்பாதுகாப்பு வலயமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

வழமையாக இந்தச் சுடலைக்குச் செல்பவர்கள் குறித்த ஒருநாளில் பிற்பகல் 4 மணிக்கு அனுமதி எடுத்து இராணுவ பாதுகாப்புடன் குறிப்பிட்ட சில மணிநேரங்களுக்கு மட்டுமே சென்று வருவது வழமை. எனவே தற்போது சிவராம் அடக்கம் செய்யப்படப்போகும் இடம் இராணுவ ஆக்கிரமிப்பு வலயம். இங்கு இவருடைய உடலைப் புதைக்க இராணுவம் அனுமதிகுமா? இராணுவம் அனுமதித்து சிவராமின் உடல் புதைக்கபபட்டால் அந்த உடல் பாதுகாப்பாக அங்கு பேணப்படுமா? இராணுவத்தினரின் துணையுடன் கொல்லப்பட்ட சிவராமின் உடலை இராணுவ முகாமிற்குள் புதைத்தால் அதே இராணுவம் சிவராமின் உடலைப் பாதுகாக்குமா?

அலலது இரவோடு இரவாக புதைத்த உடலைத் தோண்டியெடுத்து தனது கோரமுகத்தைக் காட்டுமா?

இதற்கும் அப்பால் இந்தச் சுடலைக்குச் செல்பவர்களின் எண்ணிக்கையும் வரையறுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று சிவராமின் மரணச்சடங்கில் கலந்துகொள்ள இருப்பவர்கள் அரசியல்வாதிகளும் மிகமுக்கிய அரசியல் தலைவர்களுமாக இருக்கின்றனர். எனவே இவர்களைச் சுதந்திரமாக இராணுவ முகாமிற்குள் சென்று சிவராமின் உடலைப் பாதுகாப்பாக அடக்கம் செய்ய இராணுவம் அனுமதிக்குமா என்பது கேள்விக் குறியாகியுள்ள நிலையில் இது சாத்தியமா என்பதும் சிந்திக்க வேண்டியுள்ளது.

இதனைவிட மரணச்சடங்கில் கலந்துகொள்ளும் தமிழ் அரசியல்வாதிகளை சிவராமின் இறுதி மரியாதைக்கு உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் செல்ல அனுமதிக்காமல் தவிர்த்து இலங்கை அரசு தனது அரசியல் சித்து விளையாட்டைக் காட்டாமல் இருக்குமா என்றும் சிந்திக்க வேண்டியுள்ளது. (க)

# கட்டுநாயக்க விமானநிலைய தாக்குதல் வழக்கு விசாரணைகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

கடடுநாயக்க விமானநிலையத் தாக்குதல் சம்வபவம் தொடர்பான வழக்குவிசாரணைகள் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு மேல்நீதிமன்றத்தில் இடம்பெற்றபோது குற்றவாளிகள் நீதிமன்றத்துக்குச் சமுகமளிக்கத் தவறியதால் மேல் நீதிமன்ற நீதிபதி ஐ.எம்.அபயரட்ண எதிர்வரும் ஜீன் 20ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்துள்ளார்.

கடந்த 2004ஆண்டுக்கு ஜுலை 24 ஆம் திகதி கட்டுநாயக்க விமானநிலையத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் இரண்டு விமானங்களும் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான பத்துக்கும் மேற்பட்ட விமானங்களும் தாக்கியழிக்கப்பட்டிருந்தன.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக சுப்பிரமணியம் தவராஜசிங்கம், நாகேந்திரன் நாகரட்ணம் மற்றும் தனபால சிஙகம் ஜயலக்சுமி ஆகியோர் சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கின் ஏனைய சந்தேக நபர்களான மூவர் செவவாய்க்கிழமை நடைபெற்ற விசாரணைக்கு சமுகமளிக்காததால் வழக்கு விசாரணைகள் எதிர்வரும் ஜுன் 20ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நீதிமன்ற அழைப்பாணை நீர்கொழும்பு பொலிஸாரூடாக வழங்கப்பட்டிருந்ததாக நீதிமன்றத் தகவல் தெரிவிக்கின்றது. (க-4)

# சமாதான காலத்தில் தமிழர் தாயகத்தில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை

## முல்லை கூட்டுறவுத் தொழிலாளர் சங்கம்

(கிளிநொச்சி)

மூன்றாண்டு காலமாக நீடித்து வரும் சமாதான காலம் எதுவித முன்னேற்றங்களையும் தமிழர் தாயகத்தில் ஏற்படுததவில்லை என முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுத் தொழிலாளர் ஒன்றியம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

அக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஆழிப்பேரலைக்கு கிடைத்த சர்வதேச உதவிகளைக் கூட பொதுக்கட்டமைப்பு உருவாக்கி தமிழ்மக்களுக்கு உதவிகள் வழங்க அரசு மறுத்து வருகிறது. இத்ன் கராணமாக தமிழ்மக்கள் விரக்தி அடைந்துள்ளனர்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற போர் நடவடிக்கைகளினால் சின்னாபின்னமான தமிழர் தாயகத்தின் கட்டுமானங்களை ஆழிப்பேரலை மேலும் சீரழித்துவிட்டது.

முல்லை மாவட்டத்தில் வளம் நிறைந்த முக்கிய பகுதிகளை கடலலைகள் அடித்துச் சென்றுவிட்டன. இந்நிலையில் ஒவ்வொரு மே நாளிலும் எங்கள் பிரச்சினைகளை உரைத்துக் கூறுவதுதான் வழமையாகிவிட்டது.அதிலும் பயன் எதுவும் இல்லை.

ஆதலால் எங்கள் மண்ணில் வாழும் தொழிலாளர்கள் இந்த நாளில் ஒன்றுபட்டு விடுதலைவேண்டி போராடும் தேசியத தலைமைக்குக் கரம்கொடுப்போம் என அக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-4)

# சிவராமின் படுகொலைக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பு

### அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் முன்னாள் எம்.பி விநாயகமூர்த்தி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

சிரேஷ்ட ஊடகவியலாளரும் பிரபல இரணுவ ஆய்வாளருமான தராக்கி சிவராம் படுகொலை செய்யப்பட்ட செய்தி கேட்டு நான் பெரும் அதிர்ச்சியுற்றேன்.

மூத்த பத்திரிகையாளர் றிச்சட் டி சொய்சாவின் கொலையைப் போன்றே இதுவும் செய்யப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டிய காலி வீதியில் வைத்து பஜிரோ வாகனத்தில் இவர் தூக்கிச் செல்லப்பட்ட விதமே இதனை செய்தது யார் என தெட்டத்தெளிவாகக் கூறுகிறது. இவ்வாறு தெரிவித்துள்ளார் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி. இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

இக்கொலையின் மர்மம் துலக்கப்பட வேண்டுமானால் ஸ்கொட்லண்ட்ஜாட் போன்ற வெளிநாட்டுப் புலனாய்வாளர்களின் உதவி நாடப்பட வேண்டும். வெறுமனே வெளியிடப்படும் அனுதாபச் செய்திகள், எவற்றினையும் சாதிக்கப் போவதில்லை. கொழும்பில் தமிழ் ஊடகவியலாளர்களின் செயற்பாடுகள் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளதுடன் இது ஜனநாயகத்துக்கு அடிக்கப்பட்ட சாவுமணியாகும்.

அத்துடன், இக்கொலைக்கு அரசாங்கமே இதற்குப் பொறுபபேற்க வேண்டும். இக்கொலையினை எமது கட்சி வன்மையாகக் கண்டிப்பதுடன் அந்நபரின் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (க)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

ஜீவன் தானே பிரம்ம சரீரம் என்று (அனுபுதியில்) உணர்ந்ததும் ஞானப் பிழம்பாக ஆகிவிடுகிறது. ஈடு இணையற்ற பரந்த ஏவறும் 'இருப்பாக' மாறிவிடுகிறது. அந்த நிலையில் கர்மம், துக்கம், உடல் ஆகியவற்றில் இருந்து விடுபட்டதாக ஆகிறது.

சுவாமி விவேகானந்தர்

## அரசியல் கட்சிகளின்...

கலந்து கொண்டனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மேதினக் கூட்டம் காலிமுகத்திடலில் நடைபெற்றது.

மேதினக் கூட்டத்தில் பிரதமர் மற்றும் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி கலந்து கொள்ளவில்லை. ஐக்கிய தேசிக் கட்சியின் மேதின ஊர்வலம் சுகததாச விளையாட்டு அரங்கு முன்பாக ஆரம்பமாகி கொழும்பு நகர சபை மைதானத்தை சென்றடைந்தது. அங்கு பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை ஜே.வி.பியின் மேதின ஊர்வலம் தெகிவளை எஸ்.ரி.எஸ் விளையாட்டரங்குக்கு முன்பாக ஆரம்பமாகி கொழும்பு வி.ஆர்.வி மைதானத்தை சென்றடைந்தது.

இங்கு மேதினக்கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க உட்பட கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

அரசியல்கட்சிகளின் மேதினக் கூட்டங்களில் கட்சிகளின் ஆதரவாளர்கள் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (ச-8)

### ஈழத்து இராமேஸ்வரத்தில் இன்று தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

ஈழத்து இராமேஸ்வரம் என அழைக்கப்படும் புங்குடுதீவு பாணாவிடைச்சிவன் கோயில் தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேரில் சோமஸ்கந்த மூர்த்தமாக பாணாவிடைசிவன் திருவீதி வலம்வருவார். (ச)

## மக்கள் வெள்ளம்...

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரர் கஜன், சுரேனினது தாயார், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் இணைப்பாளர் கண்ணன், யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளா கலைவிழி, வனபிதாராஜ்குமார், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ், யாழ். தேசிய எழுச்சிப்பேரவையின் செயலாளர் சொலமன் சிறில், ஆகியோர் ஏற்றிவைத்தார்கள் தேசியக்கொடியினை யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளா கண்ணனும், மேதின சுடரினை கிராமிய உழைப்பாளர் சங்கத்தலைவர் தங்கராஜாவும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து யாழ்.மாவட்ட தமிழ்த் தேசிய தொழிற்சங்கக் கூட்டமைப்பின் மேநாள் பிரகடனத்தை நிகழ்விற்கு தலைமை தாங்கிய கலாராஜ், தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கு வழங்குவதற்காக யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியிடம் வழங்கினார்.

இதனைத்தொடர்ந்து யாழ். மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், சிவனேசன், பத்மினி சிதம்பரநாதன், தேசியஎழுச்சிப்பேரவையின் செயலாளர் சிறில், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், புதிய ஜனநாயக்கட்சியின் வடபிராந்திய செயலாளர் செல்வம், வேம்படி மகளிர்கல்லூரி மாணவி மாதுளா, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் உபதலைவர் ரொபின்சன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

இதேவேளை தமிழர் தாயகப் பிரதேசங்களான கிளிநொச்சி, மட்டக்களப்பு, மன்னார், வவுனியா ஆகியவற்றிலும் மேதின நிகழ்வுகள் எழுச்சியுடன் நேற்று நடைபெற்றன. (ச-19,8)

## மரண அறிவித்தல்

### திருமதி நல்லையா வள்ளியம்மை

நயினாதீவு 5-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லையா வள்ளியம்மை 2005.05.01 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து -சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற அம்பலவாணர்-இராமாசிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் நயினாதீவு முன்னாள் கிராமசபைத்தலைவரும் பிரபல சமூகசேவையாளரும் ஆகிய காலஞ்சென்ற நல்லையா அவர்களின் அன்பு மனைவியும், திருலிங்கநாதன் (வர்த்தகர் கொழும்பு), லோகநாதன் (ஓய்வுபெற்ற பொறுப்பதிகாரி வ.பி.போ.சபை), சாரதாதேவி (பிரான்ஸ்), கெங்காதேவி, செல்வநாதன் (பொறியியலாளர் (கொழும்பு), கலைநாதன் (அதிபர் யா/புங்குடுதீவு ஸ்ரீ சித்தி விநாயகர் ம.வித்தியாலயம்), ஜெகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும், மகேஸ்வரி, நாகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை (உபஅதிபர்), சபாரட்ணம் மற்றும் தயாநிதி, பிரேமகுமாரி(ஆசிரியை யா/யாழ். இந்துமகளிர் கல்லூரி), வாசுகி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் சுகந்தி-கண்ணன் (சுவிஸ்), ரவீந்திரன்-கோமதி (பிரான்ஸ்), சுகந்தவேல்-நந்தினி(லண்டன்), கமலேந்திரன்-ஜெயந்தி (பிரான்ஸ்), சுரேந்திரன் (ஜேர்மனி), காண்டீபன்-கங்கையாழினி (பிரான்ஸ்), சப்நந்தினி(ஆசிரியை, நயினாதீவு.ம.வி), ஜீவேந்திரன்(லண்டன்) தனேந்திரன், தவப்பிரியா, சுகாசினி, அமிர்தவர்ஷினி(மருத்துவபீடம் பேராதனை பல்கலைக்கழகம்), ரூபாதாரணி, பிரணவரூபன், நியூட்டன், நிக்கோலா, திபோத், அஞ்ஜெலா (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும் கீர்த்தனின் (லண்டன்) பூட்டியும் ஆவார்.

காலஞ்சென்றவர்களான பரமநாதி, சதாசிவம், விசுவலிங்கம், செல்லம்மா மற்றும் பொன்னம்மாவின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று இன்று திங்கட்கிழமை (02.05.2005) தகனக்கிரியைகள் பிற்பகல் 3மணிக்கு நயினாதீவில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

தகவல்
ந.லோகநாதன்(மகன்)
(ஓய்வுபெற்ற பொறுப்பதிகாரி
வடபிராந்திய போக்கு வரத்துசபை)

வளர்மதி-நயினாதீவு-5

(9550)

# மேநாள் பிரகடனம் வெளியீடு

தமிழ்த்தேசிய இனத்தின் உழைக்கும் வர்க்கத்தினரை உள்ளடக்கிய தமிழ் மக்களாகிய நாம்-அனைத்துலக உழைப்பாளர் நாளாகிய மேநாளில் - மனிதத்தின் உன்னத வேட்கையாகிய சுதந்திரத்தையும், கௌரவத்தையும் வழங்கவல்ல - சுயநிர்ணய உரிமை உள்ளிட்ட மனித உரிமைகளை முன்வைத்து பின்வரும் பிரகடனத்தை வெளிப்படுத்துகின்றோம்.

தமிழ்த் தேசத்தின் இருப்பையும், சுதந்திரத்தையும் மீட்பதற்காக பல்வேறு களங்களிலும் தேசிய விடுதலைப் போராட்டத்தை பொருத்தமான வகையில் வழிநடத்தும் தமிழ்த்தேசிய இனத்தின் தலைமையாகிய தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் எமது தேசியத்தலைவர் ஆகிய மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் எமதுபூரண ஒத்துழைப்பை வழங்கி அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என உறுதிபூணுகின்றோம்.

மெய்யான பிரச்சினைகளில் இருந்து சிங்கள தேச உழைக்கும் வர்க்கத்தினரை ஏமாற்றி திசை திருப்பும்நோக்குடன் சிங்கள தேச அரசியல்கலாசாரம் பேரினவாத அடித்தளத்தில் நின்று கோலோச்சுகின்றது. சிங்கள அதிகார வர்க்கத்தினரை முறியடிக்க முன்வருமாறு சிங்கள உழைக்கும் வர்க்கத்தினரை சகோதர வாஞ்சையுடன் அழைக்கின்றோம். போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு மூன்று வருடங்களாகியும் உடன்படிக்கையில் கூறப்பட்ட விடயங்கள் இலங்கை அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இராணுவ நெருக்குவாரங்கள் தொடர்கின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகளையும், தமிழ்த் தேசமக்களையும் தாக்குவதன் மூலமும், படுகொலைகள் செய்வதன் மூலமும் - சீண்டும் இலங்கை இராணுவத்தினதும், அதன் துணைக்குழுக்களினதும் செயற்பாடுகள் போர் முனைப்பையே எடுத்துக்காட்டுகின்றன. எனவே இலங்கை படைத்தரப்பும், அதன் துணைக்குழுக்களும் எமது தாயகப்பிரதேசத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம். தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கான முன்மொழிவுகளை அப்பட்டமாகவே நிராகரித்து, இலங்கை அரசாங்கமானது, வேண்டுமென்றே நிரந்தர சமாதானத்துக்கான பாதையில் முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தி தடம்புரட்டி விட்டுள்ளது.

அத்துடன் இன அழிப்புப் போரை மீள ஆரம்பிக்கும் முயற்சிகளை முனைப்புடன் முன்னெடுத்துச் செல்கின்றது. இதற்குத் தமிழ்த் தேசமக்களாகிய நாம் முகம் கொடுக்கதயாராக உள்ளோம். மேற்கூறியவற்றிலிருந்து தமிழ்த் தேசியஇனமானது சுயகௌரவத்துடன் கூடிய சுதந்திர வாழ்க்கை குறித்த நிர்ணயமான தீர்மானங்களை எடுக்கவேண்டியுள்ளது என்பது வெளிப்படையாகிறது. இவை மனித உரிமைகளின் பாற்பட்டவை என்பதை அனைத்துலக சமூகமும் புரிந்துகொள்ள வேண்டும். எனவே எமது தேசிய அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காகவும், எமது தேசத்தின் இறைமையை மீட்பதற்காகவும் - எமது சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்டு - தேசிய விடுதலைப்போராட்டத்தை துரிதப்படுத்த வேண்டுமென்ற வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த கோரிக்கையை தமிழீழத்தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களுக்கு முன்வைக்கின்றோம்.

உயர்தர்மத்தையும், நியாயத்தையும் கொண்ட தேசிய விடுதலைப்போராட்டத்தில் அர்ப்பணிப்புடன் தொடர்ந்து பயணிப்போம் எனதமிழ்த் தேசத்து மக்களாகிய நாம் உறுதிகூறிஇப்பிரகடனத்தை வெளியிடுகின்றோம்- என்று உள்ளது.(இ)

## கருணா...

பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனையடுத்து இருவரும் தற்போது மொனராகலை சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுவிப்பதற்கு இராணுவ புலனாய்வுத்துறை உட்படப் பல்வேறு தரப்பிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதேவேளை அழுத்தங்களும் பிரயோகிக்கப்பட்டு வருவதாக தெரிய வருகின்றது. (இ)

## தமிழ் மக்கள் அரசியல்-இராணுவ...

அங்கீகாரம் இதைமறுப்பது மன்னிக்கமுடியாத குற்றம் மறுக்கமுடியாத மனித உரிமைமீறல் இது.உலக சமூகத்தின் குரல். நிலத்தால், மொழியால் பண்பாட்டு அடையாளங்களால், வாழ் முறைகளால், வரலாற்றின் குறிப்புக்களால் தனித்துநிற்கும் இனம் தன்னாட்சிக்குத் தகுதியுடையது என ஐ.நா.சாசனம் அறுதியிட்டு உரைக்கிறது.

இந்நாள் ஒடுக்கப்பட்ட, சுரண்டலுக்குள்ளான உலகத்தொழிலாளர் தமது உரிமைகளை வென்றெடுத்த ஒரு பொதுநாள். இந்நாள் ஒடுக்கப்பட்ட எல்லோரும் அணிதிரளும் நாளாக பரிணாம வளர்ச்சி கண்டிருக்கிறது.

சிங்கள, பௌத்த பேரினவாதத்தின் தமிழின அழிப்பு நடைமுறையை உடைத்தெறிந்து தம் இருப்பை நிலைப்படுத்தி வரும் தமிழ்த் தேசிய இனம் தம் அபிலாசைகளை சர்வதேசத்திற்கு மீண்டும் வெளிப்படுத்தும் நாளாகவும் இது அமைகிறது.

முடியாது என்று ஒன்றுமே இல்லை என்பதை தாரக மந்திரமாகக்கொண்டு தமீழ்த்தேசிய இனத்திற்கு தலைமை தாங்கும் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் தன்னம்பிக்கை உயர்வு தூரநோக்குபார்வை, தந்திரோபாய மதிநுட்பம், எதிரிகளின் பொறிகளை உடைந்தெறிந்து எதிரிகளை அப்பொறிக்குள் தள்ளும் ஆற்றல்,ஆளுமை, சர்வதேச ஒழுங்குகள் மாற்றங்களுக்கேற்ப மாற்றங்களை ஏற்படுத்தி எதையும் எதிர் கொண்டு முறியடிக்கும் நுட்பம்,பலமிக்க சேனைக்கட்டமைப்பைநிறுவி தேசிய அரசியலிலும். சர்வதேச அரசியலிலும் முன்னேற்றங்களை ஏற்படுத்தி எமது விடு தலைப்போராட்டத்தின் வெற்றிக்கான காலத்தை தீர்மானித்துக் கொண்டிருக்கிறார்.

இராணுவத்துணைக்குழுக்களின் சாட்டில் சிறிலங்கா படைகள் தமிழர் தாயகப்பகுதிகளில் தமது கெடுபிடிகளை அதிகரித்து வருகின்றனர். பொருளாதார வளர்ச்சியும் வேலைவாய்ப்புக்களும் இன்றி எமது வடக்கு கிழக்கில் இன்னமும் மக்கள் வாழ்கின்றார்கள் பேரழிவுகள் இன்னமும் மாறாது உள்ளது.இவற்றை எல்லாம் விட சுனாமி பேரலைகள் எம் மக்களை பெரும்அழிவிற்குள்ளும், அவலத்திற்குள்ளும் தள்ளியுள்ளது.

இதற்கு இன்று வரை தீர்வு இல்லை. யுத்த நிறுத்தத்தை மட்டும் நீடித்துக்கொண்டு தமிழர்களுக்கு தீர்வு இல்லாமல் தமிழர்களுக்கான கட்டுமானங்களை பலவீனப்படுத்தி அழிப்பதுவே அரசின் வியூகமாகவுள்ளது. இதனை நாங்கள் தெளிவாக உணரக்கூடியதாகவுள்ளது.

ஆறு சுற்றுப்பேச்சுக்களும் உருவான சிரான் அமைப்பும் செயலற்றுச் செத்துவிட்டது. இடைக்கால தன்னாட்சி அதிகார சபை பற்றிய பேச்சை அரசு மூடிவிட்டது. ஆழிப் பேரலை மனித அவலத்தை துடைப்பதற்கான பொதுக்கட்டமைப்பு பல இழுத்தடிப்புகளுக்கு மத்தியில் விடுதலைப்புலிகளின் தளர்வான விட்டுக்கொடுப்பு நிலையில் விடுதலைப்புலிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதும் இது நடைமுறைக்கு வரவில்லை இது நடைமுறைக்கு வருமா வருவதற்கான சூழ்நிலை இல்லை என்றே அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். ஆயினும் நாம் ஏமாந்தவர்களும் அல்ல. ஏமாறுபவர்களும் அல்ல.

தமிழர் தாயகத்திற்கு வரவிருந்த வெளிநாட்டு பிரதிநிதிகளின் வருகை சிங்கள அரசினால் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டது. ஆனால் சர்வதேசமோ தமிழர் தரப்பிற்கு தமது கதவுகளை திறந்து விட்டுள்ளது. தமிழர் தனிப்படுத்தப்பட்டுள்ள சகதி அல்ல. சர்வதேசத்தில் தமிழர் தேசத்திற்கான அரசியல் தளமும் உண்டு. சர்வதேசத்திற்கான தளமும் உண்டு இதுஎமது போராட்டத்திற்கான அங்கீகாரத்திற்குரியவாய்ப்பினை ஏற்படுதத்துவது தவிர்க்கமுடியாதது.

அதிக செல்வாக்கினை சர்வதேசத்தில் விடுதலைப்புலிகள் கொண்டுள்ள இத்தருணத்தில் சந்திரிகா அரசும், அதன் பங்காளியான ஜே.வி.பியும் இனவாதத்தினை கிளப்பி அரசியல் அமைப்பு சட்ட வரைபை காரணம் காட்டி தமிழர் அரசியல் உரிமைகளை மறுப்பது மனித நேய உதவிகளை புறக்கணிப்பதும், சந்திரிகாவின் காலத்தில் நடந்த செம்மணிப் படுகொலையை உலகறியச் செய்த நாட்டுப்பற்றாளர் நிமலராஜனையும், துரோகத்தனத்தை தோலுரித்துக் காட்டியதால் நாட்டுப்பற்றாளர் நடேசனையும், தமிழர் தேசியத்தினை வலியுறுத்தி நின்றதால் மாமனிதர் சிவராமினையும், படுகொலை செய்தது போன்ற மோசமான சம்பவங்கள் சர்வதேச சமூகத்திற்கு எரிச்சலை ஏற்படுத்தியதுடன், இவர்களை மனித உரிமைக்கு எதிரான சக்தியாகவும் கருதுகின்றனர்.

எனவே நம்பிக்கையுடன் திரண்டெழுவோம். தலைவர் அதற்கான வழிகளை திறப்பார். தலைவர் பிரபாகரனின் இலட்சியம் வெற்றி பெறும். அவரின் தீர்க்க தரிசனம் நிறைவு பெறும். மாவீரர்களின் கனவுகள் நனவாகும், குருதி தந்து சோறு ஊட்டி, வியர்வை சிந்திய எம் மக்கள் சுதந்திரம் அடைவார்கள் என்பது திண்ணம். என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.(இ-19,43,101)








இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.